உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சசு.] விரோதி-ளு மாசி—பங்குனிமீ [பகுதி-ச, ரு.

Vol. 46. February—April 1950 No. 4, 5.

உள்ளுறை.

கவிச்சக்கரவர்த்தி கம்பனே:—	திரு. சி. கணேசையரவர்கள்	அகூ—கூரு.
மதிப்புரை:—		கூசா—கூசு
அதிகமான் நெடுமான் அஞ்சி வரலாற்றுட் சில ஐயங்கள்:-	திரு. சு. குமாரசுவாமி ஆசாரியார் B.O.L.	கஎ—க0ச
திருக்குருகூர்த் திருப்பணிமாலை:—	திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள்	க0ரு—ககஉ
திருச்சிறுபுலியூர்-உலா குறிப்புரையுடன்:—	பத்திராசிரியர்	29—48

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1950.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணன்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪௬.] விரோதி௵ மாசி—பங்குனி௴ [பகுதி-௪, ௫.

Vol. 46. February—April 1950 No. 4, 5.

கவிச்சக்கரவர்த்தி கம்பனே

[உயர்திரு. சி. கணேசையரவர்கள், வருத்தலைவிளான், யாழ்ப்பாணம்.]

கம்பனைக் கவிச்சக்கரவர்த்தியென்று அறிஞர்கள் சிறப்பித்துக் கூறுவது ஒரு புனைந்துரையன்றென்பது, அவனாற் பாடப்பட்ட இராமாவதாரம் என்னும் பெருங்காப்பியத்தினுள் வரும் சில செய்யுட்களின் அரும்பொருள்களையும், அப்பொருள்களைச் சந்தர்ப்ப நோக்கி யமைத்துக்கூறும் சமயோசிதபுத்தியையும் நுனித்து நோக்குவார்க்கு நன்கு புலப்படும். அவன் சமயோசிதமாகக்கூறும் அப்பொருள்களை நோக்குமிடத்து அச்சிறப்புப்பெயர்தானும் அவனுடைய நுண்மதிக்குப் போதியதாகாது. அவனுடைய சமயோசிதபுத்தியைக் காட்டுஞ் சில செய்யுட்கள் இங்கே காட்டத்தக்கனவாகும்.

இராமன் பஞ்சவடியிற்சென்று பர்ணசாலையமைத்து அதிலிருக்கும்போது, அங்கே சென்ற சூர்ப்பநகை இராமனைக்கண்டு அவனழகில் ஈடுபட்டு மயங்கிக் காதல்கொண்டாள். காதல்கொண்டு அவன் தன்னை விரும்பத்தக்க ஒருவடிவம் எடுத்துக்கொண்டு இராமனையணுகித் தன்னை மணக்குமாறு இரந்துநின்றாள். அப்

பொழுது, சீதையும் அங்கே வந்தாள். வந்த சீதையைக்கண்டு அவளுடைய பேரழகை நோக்கிய சூர்ப்பநகை, 'இவள் தன்பக்கத்தி லிருக்கும்வரை இவன் என்னை விரும்பான். ஆதலால் இவளைத் தூக்கிக்கொண்டுசென்று மறைத்துவிட்டுவந்து இவனை உடன் படுத்திக் கூடுவேன்' என்று எண்ணினாள். எண்ணி, இராமனில்லாத சமயம்நோக்கிச் சீதையைத் தூக்கிக்கொண்டுசெல்லமுயன்று இலக்குவனால் மூக்கு முதலிய உறுப்பறுப்புண்டாள். அறுப் புண்டும் தன் காமந்தணியாதவளாய்ப் பின்னுஞ்சென்று இராமனை இரந்து அவனால் கோபிக்கப்பட்டு அவனைவிட்டு நீங்கினாள். நீங்கிய வள் இராவணனிடஞ்சென்று சீதையினழகைக்கூறி, அவனால் சீதையைக் கவரச்செய்து தான் இராமனைக் கூடலாமென்று கருதி னாள். கருதி இராவணனிடஞ்சென்று சீதையினழகைப்பற்றிக் கூறுகின்றாள். கூறுகின்றபோது இராவணனுக்குச் சீதைபாற் காதலையெழுப்பத்தக்கவிதமாகக் கூறவேண்டுமென்று கருதி அவ் வாறேகூறுகின்றாளாகச் சூர்ப்பநகைமேல்வைத்து,

> பாகத்தி லொருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னை
> ஆகத்தி லொருவன் வைத்தா னந்தண னாவில் வைத்தான்
> மேகத்தின் மின்னை முன்னே வென்றநுண் ணிடையை நீயும்
> மாகத்தோள் வீர பெற்ற லெங்ஙனம் வைத்து வாழ்தி

என்று சமயோசிதமாகக் கம்பன் கூறுவதை நோக்கும்போது அவனுடைய மதி எத்துணை நுட்பமாகச்செல்கின்றது. எவ் வளவிற்குச் சீதையினழகை மேம்படுத்திக்கூறலாமோ அவ்வள விற்கு மேம்படுத்திக் கூறுகின்றான். எங்ஙனமெனின்: முத்தே வர்களுள் ஒருவனாகிய சிவன் தன் காதலியை அவளழகுநோக்கி அவளைப் பிரியமுடியாமையினாலே தன்னுடம்பின் ஒரு பாகத்திலே யே வைத்துக்கொண்டான். நாராயணனோ தன் மனையாளை அவ ளழகுநோக்கி மார்பிலே வைத்துக்கொண்டான். பிரமனும் தன் காதலியைத் தன் நாவில்வைத்துக்கொண்டான். அவர்கள் வைத் துக்கொண்ட உறுப்புக்களிலே, அவர்கள் மனைவியர்களாகிய அப் பெண்களினுஞ்சிறந்த ஒருபெண்ணை நீவைத்தால் அவ்வழகிற்கு

அது பெருமையாகாது. ஆதலால் நீ அன்னனம் வைக்கமாட்டாய். அவளை நிலத்திலும் வைக்காய்! அப்போழுதினை நீ அவ்வுறுப் புக்களிலுஞ்சிறந்த உறுப்பிலேதான் வைத்து வாழவிரும்புவாய்! அவற்றிலுஞ் சிறந்த உறுப்பு உத்தமாங்கமாகிய தலையே. ஆதலால் அதிலேதான் நீ வைத்து வாழவிரும்புவாய்! என்று அவ னுடைய காதலை மிகவும் எழுப்பத்தக்கவிதமாகக் கூறும் நுண் மதி எவ்வளவு அதிசயிக்கத்தக்கது என்பது ஈண்டு அறியத்தக்க தாகும்.

இவ்வளவிலும் அவன் நுண்மதி அமைகின்றதா? அதன் மேலும் நூணுகிச் செல்கின்றது. அன்னனஞ்செல்லும் நுண்மதியினு லே சந்தர்ப்பம்நோக்கி அவன் காதலை எழுப்புமாறு அச்சூர்ப்பநகை கூற்றாக அமைத்த மற்றொருபாடலும் நோக்கத்தகும்.

> பிள்ளைபோற் பேச்சினளைப் பெற்றபின் பிழைக்க லாற்றுங்
> கொள்ளைபோ கின்ற செல்வ மவளுக்கே கொடுத்தி யைய
> வள்ளலே யுனக்கு நல்லே ன் மற்றுநின் மனையில் வாழும்
> கிள்ளைபோன் மொழியார்க் கெல்லாங் கேடுசூழ் கின்றே னன்றே.

என்னும் இதன்கண் 'அண்ணு! நீ சீதை யென்னும் பேரழகியைப் பெற்றால் நின் அரசச்செல்வமுழுவதையும் அவளுக்கே தவருது கொடுப்பாய். அதனால் நின் அந்தப்புரத்திலுள்ள பெண்களெல் லாம் அவளைக்கொண்டுவரச்செய்த என்பால் மிக்க கோபங்கொண்டு தங்களுக்குக் கேடுசூழ்ந்தாள் என்று கருதி என்னை வெறுப் பார்கள்' என்று அவனுக்கு முன்னையினும் காதலை மிகுவிக்குமாறு கூறியதை நோக்கும்போது, அவனுடைய நுண்மதி, ஒன்றைக் குறித்துப்பாடுங்கால் பாடப்பாட எவ்வளவு உயர்ச்சியடைகின்றது என்பது அறியத்தக்கதாகும். நின் செல்வமெல்லாம் அவளுக்கே கொடுத்தியென்றதனுலும் நின் அந்தப்புரமகளிர்க்கெல்லாங் கேடு சூழ்ந்தேனுவேன் என்றதனுலும் சீதை நின் அந்தப்புரமகளிரினும் மிக மேம்பட்ட அழகுடையாள் என்பதை அவனுக்குப்

புலப்படுத்தி அவனுக்குச் சீதைபாற் காதலை மிகவும் எழுப்பியவாறு காண்க.

இங்ஙனமெல்லாம் சீதையினழகை மேம்படுத்திக்கூறவே இராவணனுக்குக் காதற்கனல் மூண்டு எரிகின்றது. எரிகின்ற அக்காதலை மூட்டியது சூர்ப்பநகை இராமன்பால்வைத்த காதற்கனலே. அதனைக் கம்பன்,

> கோபமு மறனு மானக் கோதிப்புமென் றினைய வெல்லாம்
> பாபநின் றிடத்து நில்லாப் பான்மைபோற் பற்று விட்ட
> தீபமொன் றென்றை யுற்ற லென்னலாஞ் செயலிற் புக்க
> தாபமுங் காம நோயு மாருயிர் கலந்த வன்றே.

என்னுஞ் செய்யுளில் "தீபம் ஒன்று ஒன்றையுற்றால் என்னலாஞ் செயலிற்புக்க தாபமும் காமநோயும் ஆருயிர் கலந்த" என்ற அடிகளாலே விளக்கிக்கூறுகின்றான். ஒருதீபம் மற்றொருதீபத்தைப் பொருந்தி அதனாற் கொளுத்தப்பட்டு எரிகின்றதன்மைபோன்றது என்று சொல்லத்தக்க தன்மையோடு புக்க தாபமும் காமநோயும். எனவே சூர்ப்பநகைகொண்ட காமவேட்கையும் அதனாலான நோயும் இராவணனுக்குக் காமவேட்கையையும் நோயையும் பற்றவைத்தன என்பதும் ஒன்றினின்றொன்றுபற்றி இருதீபமுமெரிவதுபோல இருவருக்குங் காதற்கனல் மேற்பட்டுக்கொண்டேயிருந்ததென்பதும் பெறப்படவைத்துக்கூறியது காண்க.

இங்ஙனமன்றி ஒருதீபம் மற்றொருதீபத்தையேற்றியதுபோலக் காமநோயும் அதனாலாய தாபமும் ஆகிய இரண்டும் உண்டாயின என்று பொருள்கூறல் சிறந்ததன்று. முற்கூறிய பொருள் பொருத்தமாதல்,

> மீன்கொண்டு டாடும் வேலை மேகலை யுலக மேத்தத்
> தேன்கொண்டு டாடுங் கூந்தற் சிற்றிடைச் சீதை யென்னும்
> மான்கொண்டு டாடு நீயுன் வாள்வலி யுலகங் காண
> யான்கொண்டு டாடும் வண்ண மிராமனைத் தருதி யென்பால்

என்னுஞ் செய்யுளாலும், இராவணன் தன்முன் தோன்றிய சீதையின் உருவெளியைக் காட்டி இவள்தானே நீசொன்ன சீதையென்ன,

சேந்தா மரைக்கண் ணெடுஞ்செங்கனி வாயினேடும்
சந்தார் தடந்தோ ளொடுந்தாழ்தடக் கைக ளோடும்
அந்தா ரகலத் தொடுமஞ்சனக் குன்ற மென்ன
வந்தா னிவனுதமவ் வல்வி லிராம னென்றாள்

என்று சூர்ப்பநகை கூறியதாகச் சொன்ன செய்யுளாலும் உற்று நோக்கி அறியத்தகும்.

இராவணன் தன்முன் தோன்றிய உருவெளியைக் காட்டி இவள்தானே சீதையென்று சூர்ப்பநகையை வினவ, அவளுக்குத் தோன்றிக்கொண்டிருந்த இராமனுருவெளி அங்கும் அவளுக்குத் தோன்றுதலால் அவள் இவன்தான் இராமன் என்று கூறினாள் எனச் சமயோசிதமாக நகைச்சுவையை யமைத்து எவர்க்கும் பெருஞ்சிரிப்புத்தோன்றக் கூறிய கம்பனது மதிநுட்பம் எந்தக்கவிக்குத்தான் அமையும்?.

கவிகள் எப்போதும் ஆழ்ந்தபொருளுடையவாகவும், அப்பொருளை மிகவெளிப்படையாகக் காட்டுந் தெளிவுடையவாகவும், ஓசையொழுக்குடையவாகவும் இருத்தல் வேண்டும்; அதனைக் கம்பன் நன்றாக அறிந்தபடியாற்றான், சூர்ப்பநகைப்படலத்துப் "புவியினுக்கணியாய்" என்னுஞ் செய்யுளில், ஆன்றபொருடாங்கிப் புலத்திற்றாகிச் சவியுறத்தெளிந்து தண்ணென்றொழுக்கமுந்தழுவி" என்றும், பம்பைப்படலத்து,

எற்பொரு நாகர்த மிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழறக்
கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது

என்றும் தெரித்துக்கூறினான். கம்பன்கவிகள் யாவும் இத்தகையவே.

மதிப்புரை

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார் (பரிதிமாற்கலைஞர்) வாழ்க்கைவரலாறு 1870–1903:—[எழுதியவர்: திருவாளர் வித்வான்: ந. சுப்பிரமணியன் M.A., அவர்கள். விலை: ரூபா இரண்டு. கிடைக்குமிடம்—திரு. வி. சூ. சுவாமிநாதன் அவர்கள், புத்தகவர்த்தகர், மதுரை.]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஆங்கிலப் புலமையுடன் தமிழ்ப்புலமையும் வாய்ந்து கவியியற்றுமாற்றலும் கட்டுரைவரையும்வன்மையும் சொற்பொழிவாற்றுந்திறனும் உடையராய் விளங்கிய பெருமக்கள் ஒருசிலருள் வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரும் (பரிதிமாற்கலைஞரும்) ஒருவராவர். இவர் இவ்வுலகில்வாழ்ந்த முப்பத்துமூன்று ஆண்டுகளிற் கல்விப்பயிற்சியில் இருபத்துமூன்றுஆண்டுகள் கழிந்தன. எஞ்சிய பத்தாண்டுகளே இவர் புலமைகாட்டியகாலமாயினும், அச் சுருங்கியகாலத்துள் இவரியற்றிய அரிய பணிகள் பலப்பல. நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், பத்திராசிரியர் என அமர்ந்து அவ்வத்துறைகளில் வல்லார் மதிக்க விளங்கினர். இவர் முயற்சியால் இயற்றமிழேயன்றி நாடகக்கலையும் சிறப்புற்றது. இப்பெருந்தகையின் வாழ்க்கைவரலாறுகள் படிப்போர்க் கின்பம்பயப்பன; ஒழுகலாறுகள் இளைஞர்க்குக் கட்டளைகளாய்த்திகழ்வன. அவற்றையெல்லாம் செவ்வியநடையில் விரித்தெழுதியுதவியவரும், அழகுபட அச்சிட்டுதவியவரும் பாராட்டற்குரியர்.

இப்புத்தகம், பரிதிமாற்கலைஞர் வாழ்க்கைவரலாறுமட்டுமின்றி, அவர்காலத்துத் தமிழ்நிலையையும் தமிழ்ப்புலவர்களையும் தமிழ்வளர்த்த தக்கோர்களையும்பற்றிய வரலாற்றுக்குறிப்புக்களையும் உடையதாகவும் உருவப்படங்களுடையதாகவும் இலகுகிறது.

அரசாங்கமும் ஆசிரியர்குழுவும் இதனைப் பாடபுத்தகமாக்கி மாணவர்க்குத் தமிழ்மொழிப்பயிற்சியும் பற்றும் மிகும்படி செய்க.

திருச்சிற்றம்பலதேசிகர் கலம்பகம்:—(திருவாவடுதுறையாதீன வெளியீடு—26):—இது, திருவாவடுதுறையாதீனத்துப் பன்னிரண்டாவது மஹாஸந்நிதானமாக வீற்றிருந்தருளிய திருச்சிற்றம்பல

தேசிகமூர்த்திமீது அவரிடம் உபதேசம்பெற்றவரும் அவ்வாதீனத்துப் புலவருமான சீனிப்புலவரால் 170 ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டது; தமிழ்ப் பிரபந்தவகை தொண்ணூற்றாறனுள் ஒன்று; பத்திச்சுவை ததும்பப் பாடப்பட்டது. இதனுள் ஆசிரியர், பாட்டுடைத்தலைவர்பெருமையெல்லாம் நன்குவிளங்கும்படி இயற்றியமைத்த செய்யுட்கள் நலனொருங்கமைந்திலங்குகின்றன. இக்கலம்பகத்தை அவ்வாதீனவித்துவான் திரு. த. ச. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆராய்ந்து குறிப்புரையுடன் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இன்னோரன்ன நூல் வெளியீடுகளால் தமிழ்வளர்ச்சியடையப்புரந்துவரும் ஆதீனகர்த்தர் திறத்துத் தமிழ்மக்கள் நன்றிபாராட்டுங்கடப்பாடுடையர். இந்நூலைப்படிப்பார் இடர்ப்பாடின்றிப் படிக்குமாறு பிழையறப் பதித்துதவுவது பதிப்பாசிரியர் கடன். வேண்டுவோர் இதன் விலை முதலிய விவரம் பதிப்பாசிரியரிடம் அறிந்துகொள்க.

இந்துசாதன வச்சிரவிழா மலர்:—யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலனஸபையின் ஆதரவுகொண்டு ஆடம்பரமற்றநெறியில் சைவத்தொண்டும் தமிழ்த்தொண்டும் புரிந்துவரும் இந்துசாதனம் (இப்போது வாரம் இருமுறைவரும் தமிழ்ப்பத்திரிகை) அறுபதாம் ஆண்டு நிறைவுற்று விளங்குவதுகண்டு மகிழ்வெய்துகிறோம். இது, பத்திரிகைக்குவேண்டிய இலக்கணங்கள் பலவும் ஒருங்கமையப் பெற்றது; படிபார்க்குத் தமிழ்ப்பற்றும் தமிழறிவும் சைவசமயப் பற்றும் அச்சமய நூற்பயிற்சியும் மிகுவிப்பது. இவ் வச்சிரவிழாமலரினுள், யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலனசபை, இந்துசாதனம் என்பவற்றின் வரலாறும் அவற்றைத்தோற்றுவித்தவர்முதல் அவற்றை இற்றைஞான்று வளர்த்துவருவோர்வரையுள்ள பெருமக்கள் பெயரும், உருவப்படமும், வச்சிரவிழாவாழ்த்துக்களும், தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும்உதவிய ஈழநாட்டுப்புலவர் சிலரைப்பற்றிய குறிப்புக்களும், படித்தறியவேண்டிய பலவகைக்கட்டுரைகளும் நன்குபொறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பெரும்பணிகளில் ஈடுபட்டு அவற்றைத் திறம்பட நிறைவேற்றிவரும் சைவபரிபாலனசபை தழைக்க. இந்துசாதனம் இவ்வாறே மேலும் நற்பணிபுரிந்து நாண்மலராகிப் பற்பல வச்சிரவிழாவும் நூற்றாண்டுவிழாவும் கொண்டு நெடிது நிலவ இறைவன் அருள்புரிக.

இனியவை நாற்பது மூலமும் உரையும்:— [ஆசிரியர்நூற்பதிப்புக் கழக வெளியீடு. பதிப்பாசிரியர்: உயர்திரு S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L. அவர்கள். விலை அணா 12. கிடைக்குமிடம்: ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், 53—56 பவழக்காரத்தெரு, சென்னை.]

மதுரைத் தமிழாசிரியர்மகனார் பூதஞ்சேந்தனார் இயற்றிய இனியவைநாற்பது, பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று; கற்பார்க்குத் தமிழறிவும் நல்லொழுக்கமும் தழைவிப்பது. இந்நூல் இதற்கு முன் பலமுறை பலரால் பதிக்கப்பட்டிருக்கிறது. பழைய பதிப்புக்களில் மூலத்துள்ளும் உரையுள்ளும் கண்ட தவறுகள் சில இப்பதிப்பில திருந்தியிருப்பது மகிழ்ச்சிதருகிறது. மூலமும் உரையும் யாவர்க்கும் இனிதுவிளங்குமாறு செய்யக்கருதிப் பதிப்பாசிரியர் சில முறைகளை இப்பதிப்பிற் புகவிட்டுள்ளார். அவர் நோக்கம் பாராட்டத்தக்கது. அவர் பற்றிய முறைகளிற் சில செய்யுளோசையைச் சிதைப்பன; பொருளுணரவிடாது தடுப்பன. எனினும் இப்பதிப்பின் முன்னுரையும் விளக்கவுரையும் ஆராய்ச்சிக்குறிப்புக்களும் கற்பார்க்குப் பெரிதும் பயன்படும்.

திருவேங்கடத் தலபுராணம் (செய்யுளும் வசனமும்):—இவை, திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக்கழகத்தின் 18 ஆம் வெளியீடாகும். இவற்றுள் செய்யுள்நூல், தேவாரநகர் மதுரகவி வீரராகவஸ்வாமிஐயங்கார்ஸ்வாமியால் இயற்றப்பட்டது; திருப்பதிக் கீழ்த்திசைக் கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளரான உயர்திரு. T.P. பழநியப்பபிள்ளை B.O.L. அவர்களால் அவரெழுதிய குறிப்புரையொடு பதிக்கப்பெற்றது. வசனம், மேற்குறித்த செய்யுணூலைத்தழுவி உயர்திரு. T. P. பழநியப்பபிள்ளை B.O.L. அவர்களால் எழுதப்பட்டது. மூலநூலும் அதன் வழிவந்த வசனமும் செவ்விய மதுரஞ்சேர்ந்த நடையுடையன; தமிழகத்தின் வடவெல்லையான திருவேங்கடமலையின் மாண்பியங்களை இனிது விளக்குவன. இன்னோரன்ன நூல்வெளியீடுகளால் அரிய தமிழ்ப்பணி புரிந்துவரும் கலைக்கழகமும் பிள்ளையவர்களும் நெடிது வாழ்க. செய்யுணூலின் விலை ரூ 1–8–0. வசனநூலின் விலை ரூ 0–8–0 வேண்டுவோர் திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக்கழகத்திற் பெறலாம்.

அதிகமான் நெடுமான் அஞ்சி வரலாற்றுட் சில ஐயங்கள்

[திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரியார் B.O.L. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.]

வரலாறு:—அதிகமான் நெடுமானஞ்சி அதியர்மாபினன்; முதன் முதல் இந்நாட்டில் கரும்புகொணர்ந்தவர் வழியினன்; தகடூரைத் தலைநகராகவுடையவன்; சிறந்த வீரன்; இரவலர்க்கு இல்லையென்னாது ஈந்தவன்; புலவர்களைப் புரந்தவன்; ஔவையாரை ஆதரித்தவன்; தான் அரிதிற்பெற்ற கருநெல்லிக்கனியை ஔவையாருக்கு ஈந்து மகிழ்ந்தவன்; திருக்கோவலூரையாண்ட காரியை வென்றவன்; அவ்வென்றிக்காகப் பரணரால் பாடப்பட்டவன். இவனது இயற்பெயர் அஞ்சி. இவன் நாட்டது குதிரைமலை. இவனுக்குப் பொகுட்டெழினி என்னும் ஒரு மகன் உண்டு.

இவனால் தோல்வியுற்ற காரி, பெருஞ்சேரலிரும்பொறையைத் துணையாக அடைந்து, அவனோடு இருந்துவரும்நாளில், ஓரியை வென்று கொல்லிமலையைப் பெருஞ்சேரலிரும்பொறைக்குத் தர, அவ்விரும்பொறையும் காரிக்காக அஞ்சியைத் தாக்கி வென்றனன். அப்போது அஞ்சிக்குத் துணையாய்வந்த இருபெரு வேந்தரையும் அவ்விரும்பொறை வென்றனன்.

"சினமிகு முன்பின் வயமான் அஞ்சி, இனங்கொண் டொளிக்கும் அஞ்சுவரு கவலை" என மாமூலனார் அகம் 115ல் கூறுவதனால் 'மாற்றானுக்கு அஞ்சி ஒளித்ததனால் இவன் அஞ்சி எனும் பெயர் பெற்றனன்' என்பர் சிலர். 'இவன் அஞ்சியை வென்று பெற்ற குதிரைமலையைப் பிட்டங்கொற்றனுக்கு ஈந்தனன்' என்பர் சிலர். இனி ஐயங்களை நோக்குவோம்.

ஐயம்—1. சங்கநூல்களில் அதிகன் என்னும் பெயரொடு இருவர் காணப்படுகின்றனர். அவர்கள், மிஞிலியால் வெல்லப்பட்ட அதிகனும் (அகம் 142) பசும்பூட்பாண்டியன் வினைவல் அதிகனும் (அகம் 162, குறுந். 393) ஆவர். இவ்விருவரும் ஒருவரேயோ என ஐயுறுதற்கிடனுண்டு. ஆயினும் இது ஆராய்ச்சிக்குரியது. ஔவையார் அஞ்சியை "அஞ்சி அதியமான்" எனவும் "அதியர்கோமான் அஞ்சி" எனவும் குறித்தலால் இந்நெடுமானஞ்சி அதியர்மரபினன் என்பது பெறப்படும். மாமூலனார் அள்ளனைப்பிணித்த அதியன் ஒருவனைக் குறிக்கின்றனர். இவ்விருபுலவர்களாலும் குறிக்கப்படுபவர் இருவேறுவீரர்களோ அல்லது ஒருவரேயோ என்பதும் ஆராய்ச்சிக்குரியது. பனம்பூமாலையுண்மையால் இந்நெடுமான் அஞ்சி சேரரைச்சார்ந்தவனென்பது துணியப்படும். அதிகன் பாண்டியனைச்சார்ந்தவன். ஆதலின் அதிகன்மரபும் அதியன்மரபும் வெவ்வேறனவை என்பது நன்குபுலனும். எனினும், பதிற்றுப்பத்தின் எட்டாம்பத்துப்பதிகம் இவனை அதிகமான் எனக் குறிக்கிறது. ஆதலின், இந்நெடுமானஞ்சி அதிகமானு? அதியமானு?

ஐயம்—2.

"... ... ... வாய்வாள்
எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர்
கைதொழு மரபின்முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயர் வணர்மருப் பன்ன ஒள்ளிணர்ச்
சுடர்ப்பூங் கொன்றை யூழுறு விளைநெற்று
அறைமிசைத் தாஅம் அத்த நீளிடைப்
பிறைமருள் வான்கோட்டு அண்ணல் யானை
சினமிகு முன்பின் வயமான் அஞ்சி
இனங்கொண் டொளிக்கும் அஞ்சுவரு கவலை" (அகம். 115)

இதனுள் வரும் 'அஞ்சி' என்னும் சொல் வினையெச்சப்பொருளது. வயமானுக்கு யானை அஞ்சி ஒளிக்கும் கவலை என்பது தொடர்ப்பொருளாம். 'அஞ்சி' என்பது பெயர்ச்சொல்லே எனக் கொள்ளினும் ஒளித்தலுக்குக் காரணமாம் அச்சத்தையுடையான் எனப்

பொருள்படும் என்பது ஐயமே. அக்காரணமுணர்த்தும் பெயர்ச் சொல்லே இது எனக்கொள்ளினும் இச்சொல்லுணர்த்தும் அஞ்சி என்பான் பதிற்றுப்பத்து 31ம் பாட்டிற் குறிக்கப்படுகிற கடவுளஞ்சியா? அல்லது நெடுமானஞ்சியா? எனத் துணிதல் இயலாதாகின்றது.

ஐயம்—3. 'திருக்கோவலூரையாண்ட காரி கொல்லிமலைத் தலைவனை ஓரியைக் கொன்றனன்' என்பது "பழவிறல் ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவிற், காரி புக்க நேரார் புலம்போல், கல்லென் றன்றால்" எனக் கபிலர் நற்றிணை 320ஆம் பாட்டிற் கூறியிருப்பதனாற் பெறப்படும். "முள்ளூர்மன்னன் கழல்தொடிக்காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்வில், ஓரிக் கொன்று சேரலற் கீத்த, செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" எனக் கல்லாடனார் அகம் 209 ஆம் பாட்டில் கூறியிருப்பதனால் ஓரியைவென்ற காரி கொல்லி மலையைச் சேரலற் கீந்தனன் என்பதுதான் பெறப்படுகின்றதேயன்றி, அச்சேரலன் யார் என்பது விளங்கவில்லை. அரிசில்கிழாரும் பெருஞ்சேரலிரும்பொறையைப் பதிற்றுப்பத்தில் "கொல்லிப் பொருந" என விளித்திருக்கின்றாரேயன்றி, அவன் கொல்லிமலையை அடைந்தவாறு கூறவில்லை.

கல்லாடனாரால் பாடப்பெற்ற சேரன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல். அப்புலவரது சமகாலத்தவர்களுள் குறுங்கோழியூர் கிழாரால் பாடப்பட்டவன் மாந்தரன்சேரலிரும்பொறை. மதுரைக் கணக்காயனாரால் பாடப்பட்டவன் பொறையன். மாங்குடிமருதனாரால் பாடப்பட்டவர் கோதையும், குட்டுவரும். நக்கீரரால் பாடப்பட்டவர் குட்டுவன், கோதை, கோதைமார்பன், சேரல், வானவரம்பன் ஆகியோர். பரணரால் பாடப்பட்டவர் மாந்தரன் பொறையன், குடக்கோநெடுஞ்சேரலாதன், குட்டுவன் ஆகியோர். இவர்களுள்: கோதை, கோதைமார்பன், வானவரம்பன், குட்டுவன் ஆகியோர் காலத்தாற் பிற்பட்டவராகலாமெனக் கருதினும் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், மாந்தரன்சேரலிரும்பொறை, மாந்தரன்

பொறையன் கடுங்கோ ஆகிய இவர்களுள் அம்மலைப்பகுதியைப் பெற்றவர் யார்? எனத் துணிவதற் கியலவில்லை. கல்லாடனார் அகம் 209ல் குறிக்கும் சேரனும், நக்கீரர் குறிக்கும் சேரனும் ஒருவராகவே இருக்கலாமோ? எனக் கருதினும், அச்சேரல் சங்கச்செய்யுட்கள் குறிக்கும் சேரமன்னர்பலருள் யாவன்? என்பது விளங்கவில்லை.

ஐயம்—4. மேற்குறித்த அகம் 209, நற்றிணை 320ஆம் செய்யுட்களால் காரி தானாகவே ஓரியைவென்று கொல்லியைச் சேரனுக்கீந்தனனா? அல்லது சேரனுக்காகச் சென்று போர்புரிந்து வென்றனனா? என்பது புலனாகவில்லை.

ஐயம்—5. அஞ்சியைப் பாடியபுலவர்கள் ஒளவையார், பரணர், பெருஞ்சித்திரனார், அரிசில்கிழார் ஆவர். இவர்களுள், ஒளவையாரால் பாடப்பெற்ற சோழபாண்டியர்கள் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும், கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியுமாவர். பரணரால் பாடப்பெற்ற சோழபாண்டியர்கள் கரிகாலன், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, பசும்பூட்பாண்டியன் என்பவராவர். பதிற்றுப்பத்துள் எட்டாம்பத்துப் பதிகம் 'அஞ்சிக்குத் துணையாய்வந்த இருபெருவேந்தரையும் பெருஞ்சேரலிரும்பொறை வென்றனன்' எனக் கூறுகிறது; அவர் தம்பெயரைக் குறிக்கவில்லை. ஆதலின் மேற்குறித்த சோழபாண்டியர்களுள் பெருஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டவர் யாவர்? என்பது புலப்படவில்லை.

ஐயம்—6. அஞ்சியைவென்ற பெருஞ்சேரலிரும்பொறை அஞ்சிக்குரிய குதிரைமலையைப் பிட்டங்கொற்றனுக்களித்தனன் என்பர் நற்றிணையுரையாசிரியரும், அபிதானசிந்தாமணியுடையாரும். குதிரைமலை அஞ்சிக்குரியதென அகம் 372ல் பரணரும், புறம் 158ல் பெருஞ்சித்திரனாரும் கூறுகின்றனர். ஆலம்பேரி சாத்தனார் அகம் 143ல் வானவன்மறவனாகிய பிட்டனுக்குரியது குதிரைமலை

யென்பர்; கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் புறம் 168ல் பிட்டங்கொற்றனுக்குரியதெனக் குறிக்கின்றார். எனினும், பிட்டங்கொற்றனென அப்பாட்டுக் குறிக்கவில்லை; பாட்டின் அடிக்குறிப்பே கூறுகிறது. பெருஞ்சேரலிரும்பொறை இம்மலையைப் பிட்டங்கொற்றனுக்களித்தனனென்பதற்கு இவர் தங்கூற்றைத்தவிர வேறுசான்று காணோம். பிட்டனுக்குரியதென ஒருபுலவரும் பிட்டங்கொற்றனுக்குரியதென வேறொருபுலவரும் குறிக்கின்றனர். தந்தைக்குரியதை மகனெய்தினன். இதைப் பிட்டங்கொற்றனென்னும் தொடரே வலியுறுத்தும். அப் பிட்டன் வானவன்மறவன் என்பர் ஆலம்பேரி சாத்தனாரும் மருதனிளநாகனாரும். வானவன் என்பது சேரமரபுக்குரிய ஒரு பொதுப்பெயராகக் காணப்படினும், அப்பெயராலேயே குறிக்கப்பட்ட மன்னனும் உண்டு. வடமவண்ணக்கன் தாமோதரனார் "வயமான் பிட்டன், ஆரமர் கடக்கும் வேலும் அவனிறை, மாவள் ளீகைக் கோதையும், மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே" எனக் குறிப்பதனால் கோதையின்மறவன் பிட்டன் என்பது பெறப்படும். ஆலம்பேரிசாத்தனாரும் மருதனிளநாகனாரும் இவனை வானவன்மறவன் என்பர். ஆதலின் கோதையும் வானவனும் ஒருவரேயாகவோ அல்லது ஒருவர்பின் ஒருவராக உரிமையெய்திய இருவேறுமன்னராகவோ ஆதல்வேண்டும். எங்ஙனமாயினும் அப்பெயர்கள் பெருஞ்சேரலிரும்பொறையைச் சுட்டா என்பது தேற்றம். பிட்டனுக்குரியதாயிருந்த குதிரைமலையை அவன்மகனாகிய கொற்றனுக்குப் பெருஞ்சேரலிரும்பொறை அளித்தனன் என்பது எங்ஙனம் பொருந்தும்? தாயங்கண்ணனாரும் மதுரை அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனாரும் கொல்லிக்குடவரை வானவனுக் குரியதென்கின்றனர் (அகம் 213, 33). ஆதலின், வானவன் நாட்டதாகிய குதிரைமலை அவனது மறவன் வாழ்ந்த நாட்டுப்பகுதியதுபோலும். 'பிட்டனிடத்திருந்தோ கொற்றனிடத்திருந்தோ அம்மலையைப் பிறர்கவரப் பெருஞ்சேரலிரும்பொறை அதனை மீட்டுத்தந்தனனோ? எனக்கருதுவதும் இயலாததாகின்றது.

ஐயம்—7. அஞ்சியைப்பாடிய பெருஞ்சித்திரனார் பாரிபேகன், ஆய் முதலியவரையும் பாடியிருக்கின்றார். பரணர் மாந்தரன், பொறையன், கடுங்கோ, குடக்கோநெடுஞ்சேரலாதன், குட்டுவன் முதலியவரையும் பாடியுள்ளார். பெருஞ்சித்திரனாரால் புகழப் பட்ட மோசி ஆய் - அண்டிரனைப் பாடியுள்ளார். அவ்வண்டிரன், அந்துவன் சேரலிரும்பொறை சோழன் முடித்தலைக்கோப் பெரு நற்கிள்ளி ஆகியவருடைய காலத்தவன். மோசிகீரனார் ஆய், நன்னன், பெருஞ்சேரலிரும்பொறை ஆகியவரைப் பாடியுள்ளார். மோசிகீரனா ரால் பாடப்பட்ட பெருஞ்சேரலிரும்பொறை, கபிலரால் பாடப் பெற்ற செல்வக்கடுங்கோவாழியாதனின் மைந்தன் எனக் கருதப்படு கின்றான். முடமோசியார் அச்செல்வக்கடுங்கோவின் தந்தையாகக் கருதப்படுகிற அந்துவன் சேரலிரும்பொறையைப் பாடியுள்ளார். எனவே, அதியமான் நெடுமானஞ்சி, செல்வக்கடுங்கோவாழியாதன் பெருஞ்சேரலிரும்பொறை ஆகிய இவ்விருசேரமன்னரதுகாலத் தவனாதல்வேண்டும். தாலமி என்னும் யவனாசிரியர் தம்நூலுள் ஆய் அண்டிரனைக்குறிப்பதால் அஞ்சியும் அக்காலத்தவன்—தாலமியின் காலத்தவன்—கி. பி. இரண்டாம் நூற்றாண்டவன்—என்பர் சிலர். பெருஞ்சேரலிரும்பொறை, கபிலரால் பாடப்பட்ட சேரமன்னன் மகன் எனக் கருதப்படுவதால் கபிலருக்குச் சமகாலத்தவனாகவோ சற்றுப் பிந்தியவனாகவோ ஆதல்வேண்டும். கபிலர் ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்தக் குறிஞ்சிப்பாட்டை யியற்றினார் என்பர். அவ்வாரிய அரசன் புஷ்யமித்திரன் என்பவனால் கி. மு. 184ல் கொல்லப்பட்டான் என்பர். எனவே அஞ்சியின்காலம் கி. மு. இரண்டாம்நூற்றாண்டின் முற்பகுதியுமாம். ஆயைப் பாடிய உமட்டூர்கிழார்மகனார் பரங்கொற்றனார் மோரியரைக் குறிப்பதால் அசோகனுக்குப் பிற்பட்டவரும் வலியற்றவருமாகிய மோரியர் வாழ்ந்தகாலமாகிய கி. மு. 232க்கும் கி. மு. 184க்கும் இடைப் பட்டகாலத்தவன் எனக் கொள்ளலாம். இக்கருத்து, கபிலரது காலத்தவன் என்பதை வலியுறுத்தும். மெகஸ்தனிஸ் குறிப்பிற் காணப்படும் சேரர்மரபுப்பட்டியலில் தமிழ்ப்பெயரே காணப்படா

மையால் (வடமொழிப்பெயர்களே காணப்படுவதால்) மெகஸ்தனிஸ்காலத்துக்கு முற்பட்டவனென்றும் கூறலாம். ஆதலின் நெடுமானஞ்சி எக்காலத்தவன்? என்பது ஆராய்ச்சிக்குரியதாக இருக்கின்றது?

ஐயம்–8. பெருஞ்சேரலிரும்பொறையால் தகடூரில் கொல்லப்பட்டவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பர் பலர். பெருஞ்சேரலிரும்பொறை தகடூர்ப்போரிற்கொண்ட வெற்றியைச் சிறப்பித்துப் (பதிற்றுப்பத்து 71—80) பாடிய அரிசில்கிழாரால் பாடப்பட்ட கையறுநிலை (புறம் 230) எழினி என்பான் ஒருவனைக் குறிக்கின்றது. அப்பாட்டின் அடிக்குறிப்பு "தகடூர்பொருதுவீழ்ந்த எழினி" எனக் குறிக்கிறது. புறநானூற்று 231, 232, 235, 390, 93-ஆம் பாடல்களும் அவற்றின் அடிக்குறிப்பும் அஞ்சியின் தகடூர்ப்போரைப்பற்றி ஒன்றும் குறிக்கவில்லை. அதிகமான் நெடுமானஞ்சியைப் பாடிய ஔவையார் "மதியேர்வெண்குடை அதியர்கோமான் கொடும்பூணெழினி" என எழினி ஒருவனைப் புறம் 392-ல் குறிக்கின்றார். இவ்வதியர்கோமானாகிய எழினி அதிகமான் நெடுமான் அஞ்சியின் மகனான பொருட்டெழினி என்பது அச்செய்யுளின் அடிக்குறிப்பு. தாயங்கண்ணனாரால் பாடப்பட்ட 'சில்பரிக்குதிரைப் பல்வேலெழினி' (அகம் 105) ஒருவன் உண்டு. தாயங்கண்ணனார் பாண்டியன் நெடுஞ்செழியன்காலத்தவர். அப்பாண்டியனது வெற்றியைக்குறித்த நக்கீரர் அகம் 36-ல் பொலம்பூணெழினி என்பான் ஒருவன் அப்பாண்டியனால் தலையாலங்கானத்துக் கொல்லப்பட்டான் என்பர். மாமூலனார் அகம் 211-ல் பரதவர்மன்னனாகிய மத்தி என்பானால் வெல்லப்பட்ட எழினி ஒருவனைக் குக்றிகின்றார். மத்தி, ஐயைதந்தையாகிய தித்தன்காலத்தவன் (அகம் 6). ஆதலின், அரிசில்கிழாரால்பாடப்பட்ட எழினியும் நக்கீரரால் குறிக்கப்பட்ட எழினியும், மாமூலனார் குறித்த எழினியும் ஒருவரல்லர். காலத்தால் வேறுபட்டவர். ஆதலின், அரிசில்கிழாரால் பாடப்பட்ட எழினி ஔவையாரால் பாடப்பட்ட எழினியேயாதல்வேண்டும். ஆதலின் தகடூரில் பெருஞ்சேரலிரும்பொறை

யால் வெல்லப்பட்டவன் அதிகமான்நெடுமானஞ்சியா? அதியர் கோமானாகிய கொடும்பூணெழினியா? அல்லது பெருஞ்சேரலிரும்பொறையை எதிர்த்த அஞ்சிக்குத் துணையாக அவன் மகனும் போர்க்களம்புகுந்து இறந்தானென்பதா? அவ்வாறு இறந்தான் எனின் எழினிக்காகக் கையறுநிலைபாடிய அரிசில்கிழார் அஞ்சியைப் பற்றி ஒன்றும் கூறாததேன்? அஞ்சிக்காகக் கையறுநிலைபாடிய ஔவையார் எழினிக்காக வருந்தாததேன்? இறந்தொழிந்த சங்கப் பாடல்கள் பலவற்றுள் அஞ்சிக்காக அரிசில்கிழாரும் எழினிக்காக ஔவையாரும் பாடிய கையறுநிலைகளும் சில என்பதும் தகுமோ?

ஐயம்—9. பெருஞ்சேரலிரும்பொறை தகடூர்மன்னனொடு பொருதற்குக் காரணம் 'அச்சேரல் காரிக்குத் துணைசெய்யவேண்டும் எனக் கருதியதேயாம்' என்பர் பலர். அக்கூற்றுக்குச் சான்றில்லை. ஆயினும் காரணம் ஒன்று இருத்தல்வேண்டுமன்றோ? அக்காரணம் யாது? புறநானூற்றுப்பாடல் ஒன்று காரணம் கூறும். அரிசில்கிழார் (புறம் 230-ல்) பொய்யாஎழினியைக்குறித்துக் கையறுநிலை பாடியுள்ளார். உற்றுநோக்கின் அப்புலவரால் பாடப்பட்ட புறம் 281, 285, 301, 342-ஆம் பாடல்களும் அந்த 230-ஆம் பாடலோடு தொடர்புடையன என்பது விளங்கும். "எஞ்ஞோர்மகள் கொல் இவள்" என வினவிய வெண்வேல்நெடுந்தகைக்கு இப்புலவர் "திருநயத்தக்க பண்பின் இவள் நலனே, பொருநர்க் கல்லது பிறர்க் காகாதே ... ... வாள்தக வைகலு முழக்கும் மாட்சி யவரிவள் தன்னைமாரே" எனக் கூறியதாகப் புறம் 342-ஆம் பாட்டு மகட்பாற் காஞ்சித்துறையில் அமைந்திருக்கிறது. ஆதலின், 'தகடூர்மன்னனது மகளைக் கொள்ளவிரும்பிய பெருஞ்சேரலிரும்பொறை அவ் விருப்பம் ஈடேறாததால் பாரிமகளிரை விரும்பிப் பறம்புமலையை மூவேந்தர் முற்றுகையிட்டதுபோலத் தகடூரைத் தாக்கியிருக்கலாம்' எனக் கருதுதற்கிடனுண்டு.

ஆதலின், அறிஞர்கள் இவைகளை ஆய்ந்து உறுதியான கொள்கைகளை விளக்குவார்களாக. சுபம்.

ஸ்ரீ:

திருக்குருகூர்த் திருப்பணிமாலை

[திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள், ஆசிரியர், ஆழ்வார்திருநகரி.]

[அ௲-ஆம் பக்கத் தொடர்ச்சி]

56 இந்நிலமெல் லாம்புகழும் சீபராங் குசநல்லூ ரிரங்க நாதர், சந்நிதியிற் சோபான மண்டப … … … … … …, முன்னுபுகழ்க் கன்மதிலுந் திருவாசல் மடைப்பளியு முகந்தே செய்தான், மன்னர் புகழ் கனயோகன் கஸ்தூரி ரங்கப்பன் வரிசை மாலே.

57 செந்நெல்வயற் கயல்துதிக்கும் சீபராங் குசநல்லூர் சிறப்பா யோங்க, அன்னசொன்னங் கொடுத்தருளச் சத்திரமுண் டாக்கியதி லக்ரகார, மன்னுமறை வயிணவர்க்குத் தானதன மிகக்கொடுத்து மகிமை பெற்றான், நன்னய குணாளனெங்கள் கஸ்தூரி ரங்கப்ப னளின மாலே.

58 குருகைநக ராழ்வார்க்கும் ஆதிநா ராயணர்க்குங் கோயி லுக்குட், பெருமைபெறு சீபராங் குசமண்ட பத்துள்மகாப் பிரீதி யாக, இருநிலமெல் லாம்புகழக் கற்குறடு துலங்கவே யிரண்டுஞ் செய்தாள், அருமையுடன் வடதேசத் திருந்தரா மானுசனென் னம்மை தானே.

---

56 பொருநைக்கு வடகரையில் ஸ்ரீபராங்குசநல்லூர் அரங்கநாதர் கோவிலில் சோபானமண்டபமும் விமானமும் மதிலும் மடைப்பள்ளியும் படித்தாமும் கஸ்தூரிரங்கப்பன் என்பவர் செய்தார். இவ் வரங்கநாதன் கோவிலை, ஆற்றின் வடகரைப் பராங்குசநல்லூர் வெள்ளத்தால் அழிந்த பின்பு தெற்குமாடத்தெருவில் கட்டியிருக்கின்றனர்.

57 கஸ்தூரிரங்கப்பன் என்பவர் அக்கரை ஆழ்வார்தோப்பாகிய ஸ்ரீ பராங்குசநல்லூரில் சத்திரங்கட்டி அக்கிரகாரமமைத்து வைணவப்பிராமணருக்குத் தானமும் செய்தார்.

58 வடநாட்டிலிருந்த இராமானுசம்மை பராங்குசமண்டபத்தில் ஆழ்வாருக்கும் பெருமாளுக்கும் இருகுறடுகள் கட்டினள்.

59 மகராமீ னெறிசலதிப் புவிமீதிற் குருகைநெடு மால்கோ யிற்குள், திகழுமுகு கொங்கணியன் குறட்டின்பால் மண்டபமுஞ் சிறப்பாய்ச் செய்தாள், பகருமறை வேதியர்தம் குலத்திலே யவ தரித்த பதுமை மாதர், அகமகிழும் வடதேசத் திருந்தரா மானுச னென் னம்மை தானே.

60 குருகைநகர் வீதியிற் கல்லினல் சீபராங் குசவிலா சங் கட்டியே, கூறுந் திருப்பதிப் பெருமாள்க ளொன்பதின்மர் கூடிவத் தேயிருக்கத், திருஞான தேசிகன் பாமாலை பாடியவர் சேவடி பணிந்துநிற்கச், சீராம சாமிபிர திட்டையு மண்டபத் திற்குட் சிறப் பும்வைத்துப், பெருமைபெற வமுதுடன் பணியார வர்க்கவகை பெருகமுது செய்யவைத்து, ப்ரீதியொடு பூசனை நடத்தியன தானம்வெகு பேருக்கெல் லாங்கொடுத்தான், அருமைதிகழ் பண் டில்நகர் வேங்கட ராமனருள் அற்புத சுகுணபாலன், அவனியர சாளவரு துரைராம சாமியெனு மகவாத கல்யாணனே.

கற்பணி முற்றும்.

பொற்பணி மரப்பணி கட்டளைகள்

61 எண்ணு நன்மறை யின்றமி ழாயிரம்
பண்ணி மேவும் பரன்சிக ரத்துமேல்
நண்ண வம்பொன்னி னன்முடி நாட்டினன்
கண்ண னின்னருட் காமன் வரதனே.

---

59 முன்கூறப்பட்ட இராமாநுசம்மாள் கொங்கணியன்குறட்டுக்குப் பக்கத்து மண்டபத்தைக் கட்டினாள்.

60 பண்டில் வேங்கடராமநாயக்கர்மகன் ராமசாமிநாயக்கர் மாசித் தெரு வடகீழ்மூலையில் சீபராங்குசவிலாச மண்டபத்தைக் கட்டினார். நவ திருப்பதிக் கருடசேவை நிகழ ஏற்பாடுசெய்தார். ஸ்ரீராமரை மண்டபக் கோயிலுக்குள் ப்ரதிட்டைசெய்து பூஜையும் சிறப்பாக நடத்திவைத்தார். விசேஷமான ததீயாராதனமும் நடத்தினார்.

61 வரதன் என்பார் நம்மாழ்வார்விமானத்தில் பொற்கும்பம் வைத் தார்.

62 மருவுததி யோதனக்கட் டளைக்குங்கான் கண்டதொரு மடங்கோ யிற்குட், பெருகமுது செய்யும்விழாக் கட்டளைக்கும் குலமறையோர் பேரு னுக்கும், பொருவருங்கற் குளத்தொடுதா மரைச்செல்வி முதல்நாட்டுப் புறமும் விட்டான், கருதலரொண் பெரியவீ ரப்பபூ பதியுலகங் காவ லோனே.

63 புண்டரிகை கோனுதி நாதர் மேவும்
பொருப்புவிமா னங்கனகம் பூசி முத்தின்
கண்டசரம் வரிசையா ரங்கள் பொன்னுற்
காவிருகை கிளியார மேவு வித்தான்
எண்டிசையும் போய்விசையம் கொண்டு முந்நீர்
இருநிலமும் ஒருகுடைக் கீழி னுண்டான்
மண்டலிகன் பெரியவீ ரப்ப பூபன்
வாலிபனுகிய கிட்டி னப்ப வேந்தே.

64 எங்கள்கோ மாறருக் கிசைபொற் றண்டிகை
பைங்கண்மாத் தந்தவெண் பல்லக் கீந்தனன்
கொங்குலாங் கடம்பொழிற் கோலக் கோண்டைவாழ்
செங்கண்மால் வேங்கடாத் திரி மகீபனே.

65 குருகைமா றருக்குழைக் குடியுஞ் செம்பொன்னின்
திருவரை நாணுமுன் சேர்த்து நல்கினன்
பெருதுவி சைக்குள்வீப் பிரபி ரான்றமிழ்க்
காரணனை யானதிரு வரங்க நம்பியே.

---

62 பெரியவீரப்பநாயக்கர் என பவர் ததியோதனக்கட்டளைக்கும் கிருஷ்ணன் கோயில்மடத்தில் அமுதுசெய்யும் விழாக்கட்டளைக்கும் அந்தணர்க்கூட்டும் பேருணுக்கும் கற்குளமும் தாமரைச்செல்வியும் முதலிய நாட்டுப்புறங்களை மானியமாகவிட்டார்.

63 பெரியவீரப்பநாயக்கர்மகன் குமாரகிருஷ்ணப்பநாயக்கர் பெருமாள் கோயில் விமானத்தூபிக்குப் பொன்பூசினர் கண்டசரமும் ஆரங்களும் முதலியவற்றைச் செய்தளித்தார்.

64 வேங்கடாத்திரி யென்பவர் நம்மாழ்வாருக்குப் பொற்றண்டிகையும் தந்தப்பல்லக்கும் கொடுத்தார்.

65 வீரையிலுள்ள திருவரங்கநம்பியென்னும் விப்பிரர் மாறருக்கு உழைக்குடியும் அரைஞாணும் சேர்த்தளித்தார்.

66 தன்னந் தாமரைக் கண்ணர்க்கு வியப்போடு தழுவிவீற் றிருக்கின்ற, வண்ணஞ் சேர்கிளர் பதக்கமுங் காரையும் வங்கியும் பொன்னாணும், பண்ணங் கேழ்தரு திருமணி வடமுநம் பரிந்து சற்கினிதீந்தான், அண்ணங் கார்மகிபதிகுல மன்னவிகோண் டம்ம னம்புய மாதே.

67 மறைபயில்சீர்ச் சடகோப மாமுனிவன் சொன்னபடி மறந்தி டாமல், அறைதருபொன் னுடையாபரணம்வேண் டியவுமளித் தன்பினோடும், குறைவரும்பங் குனிவிழாக் கட்டளையும் செய்து கொம்பன் குளமும் விட்டான், முறைபுரி வேங்கடராசன் பராசர் திறையிடும்பொன் முன்றிலானே.

68 பண்டுலோகம்பரிக்கு மறையனுரைப் படிக்குவிலைப் பாவை ஞாலம், கண்டகோயிலிற்செம்பொற் பள்ளையமொன் றதுகொடுத் துக் காதலோடு, மண்டுநீர் சூழ்ந்தகருங் குளம்விடுத்துக் கொண் டான்சீர் வையமேழும், கொண்டமா பதிதரும பதிபுருடோத் தமபதியெங் கொற்றவேந்தே.

69 மறனுலாவும்வேற் றிருவடி ராசனை வைகலுங் குறை வேண்டிப், புறனுலாவிய தென்கரைப் பெரியநன் புரவுமேல் விடு வித்தான், திறனுலாவிய மாறர்சீ காரியம் செய்பவனெனலாகல், அறனுலாவிய மடபதி யாளிபஞ் சாண்டியெம் பெருமானே.

---

66 அண்ணங்கார்மன்னவி கோண்டம்மன் என்பவர் நம்மாழ்வார்க்குப் பதக்கமும், காரையும், வங்கியும், அரைஞாணும், மணிவடமும் செய்தளித் தாள். பதக்கத்தில் கண்ணன், உருக்குமணி, சத்தியபாமை திருவுருவம் பொறித்திருந்தது.

67 வேங்கடராயன் என்பவர் சடகோபமுனிவன் கேட்டுக்கொண்ட வண்ணம் பொன்னுடையும் அணியும் அளித்துப் பங்குனிவிழாக்கட்டளைக்குக் கொம்பன்குளத்தைவிட்டு ஏற்பாடுசெய்தார்.

68 புருஷோத்தமபதி என்பார், அரசன் உரையின்படி செம்பொற் பள்ளையம் ஒன்று கொடுத்தார்; கருங்குளம் விடுத்தார்.

69 மடபதி பஞ்சாண்டியென்பவர், திருவடிராசனைக்கேட்டுத் தென் கரைப்புரவை மானியமாகவிடச்செய்தார்.

70 நித்தியமஞ் சனவொலியல் திருமணகாப் போதனமு நிரு மித்தாழி, தத்தியநன் பெருங்கீர்த்தி நரபதியைக் குறைவேண்டித் தானமாக, வித்தியதா தன்குளமுஞ் சித்தைகுள முஞ்சேர விடுவித் தான்மா, பத்தியலோ தரும்பாக வதனனந்த வையன்பூம் பகழி வேளே.

71 ஓங்கிய நரபதிக் குரைத்து மாவளம்
தேங்கிய கீழ்படா கையைமுன் சேர்த்தனன்
தாங்குல வைணவர் தம்பி ரான்றிரு
வேங்கட மண்ணன்வில் வீர வீரனே.

72 கன்னகு மிருவகைக் காசுத் தாழியா
மின்னூறு பதக்கமும் விரிபொன் னுடையும்
அன்னவா கனக்கதி ரவற்கு நல்கினன்
தென்னவன் கச்சிவாழ் திரும லேந்த்ரனே.

73 திருமலைவேங் கடமுகிற்பிர திட்டையாழ் வார்கள்பிர திட்டை சோதிக், குருமணிமா மகுடமிர சதத்தளிகை தும்பிதிருக் குலவுநேமி, மருவுபராங் குசநாமம் பெறுகிராம நான்கெல்லை வகுத் தல் செய்தான், கருதலர்வங் தடிபரவும் காவைவட மலையப்பன் கருணை மாலே.

---

70 அனந்தையன் என்பவர் திருமஞ்சன ஒலியலும் திருமணகாப்பும் ஓதனமும் ஏற்படுத்தினர். மன்னனைவேண்டித் தாதன்குளத்தையும் சித்தை குளத்தையும் தானமாக விடுவித்தார். ஒலியல் - ஆடை; மாலையும் ஆம். ஓதநம் - அமுது.

71 வேங்கடம் அண்ணன் என்பவர் கீழ்படாகையை மன்னனிடம் சொல்லிச் சேர்த்தார்.

72 கச்சித்திருமலேந்திரன் என்பவர் ஆழ்வாருக்குப் பதக்கமும் பொன் னுடையுமளித்தார். அன்னவாகனக்கதிரவன் - ஹம்ஸவாகனபாஸ்கரன் = சடகோபர்.

73 காவை வடமலைப்பிள்ளையன் என்பவர், வேங்கடமுகிலைப் பிர திட்டைசெய்தார்; ஆழ்வார்களைப் பிரதிட்டைசெய்தார்; மணிமகுடம், இரச தத்தளிகை, தும்பி, திருவாழியென்பவற்றைச் செய்துவைத்தார்; பராங்குச நல்லூருக்கு எல்லைபிரித்தார். இரசதத்தளிகை - வெள்ளியுண்கலம். தும்பி - யானை.

74 மறுவிலா வன்னமுங்கோ மாறர்கோ டைத்திருநாள் வளமு மாதந், தொறுமுலா வருசதயச் சிறப்புமகிழ்ச் சுடரொடுமச் சுத னுலாவு, முறுவிசா கச்சிறப்பு முளாராமா நுசகூடத் தோடுஞ் சேர்த் தான், முறுவல்வான் முகன்காவை வடமலைபூ பதிமாதர் மோக வேளே.

75 பங்குனியிற் றேர்தாளக் குடைபவளக் குடைகொடிகள் பைம்பொன் னீடும், வங்காா டக்கயம்பூச் சக்கிரவா ளக்குடைமா வலிவா ணன்றேர்க், கங்காருஞ் சுவடுமுதற் றளவாட மாறாவர்க் கடைவே சேர்த்தான், செங்காவி வயற்காவை வடமலைபூ பதிமகி மைச் செங்கண் மாலே.

76 நீலமணி பொன்மணிபாய் நெடியதிரு மணிவடமு நிழற் றிண் டோடுங், கோலமணி யாரமுநன் சகத்திராதா ரையுங்காரி குமாற் கீந்தான், ஞாலமணி நாவலரெண் விசயரா கவனுபய நய னம் போலும், சீலமணி வாசலதி பதிராச கோபாலன் றெவ்வ ரேறே.

77 கொந்தாரு மகிழ்த்தொடையற் கோமாறன் மிருகருணை கூரச் சோதி, நந்தாத வெள்ளிநவ பாத்திரக்கிண் ணியுங்குடமும் நல்கல் செய்தான், ஐந்தாரு மதுரையதி பதிசோக்க நாதனுக்கின் னருளே கூடும், கந்தாடை வாழ்சீனி வாசதே சிகனியற்பா கவதர் கோவே.

---

74 காவை வடமலைபூபதி அன்னவாகனமும், ஆழ்வார் கோடைவிழா வும், மாதாமாதம் சதயச்சிறப்பும், ஆழ்வாரொடு ஆதிநாதர் உலாவரும் விசாகச்சிறப்பும், இராமாநுசகூடமும் அமைத்தார். மகிழ்ச்சுடர் - வகுள பாஸ்கரன் = சடகோபன்.

75 காவை வடமலைபூபதி, பங்குனித்தேர் தாளக்குடை பவளக்குடை கொடிகள் வங்காரடக்கயம் பூசக்கரவாளக்குடை மாவலிவாணன்தேர்க் குரிய மற்றத் தளபாடங்கள் என்பவற்றை முறையே அமைப்பித்தார்.

76 விஜயராகவனுடைய கண்ணன்ன ராஜகோபாலன் என்பார் ஆழ் வாருக்கு மணியாரமும் தோடும் முத்துவடமும் சகசரதாரையும் செய்தளித் தார்.

77 மதுரைச் சொக்கநாதநாயக்கரின் ஆசிரியர் கந்தாடைச் சீனிவாச தேசிகன் என்பார் மாறன் சடகோபருக்கு வெள்ளி நவபாத்திரக்கிண்ணியும் குடமுஞ் செய்தளித்தார்.

78 ஆரணநா வலர்புகழு மாதிமால் புகழ்மாற ரன்பு கூரப், பூரணமாய்ப் புனைரத்தினத் திருவபிடே கம்பாகை புதிதாய்ச் சேர்த்தே, தாரணியோர் கொண்டாட வனப்பதக்கம் அமைத் தமையாத் தனிச்சீர் பெற்றான், நாரணவே தியன்பாலன் கணக்கு வேங்கிப்பிள்ளை நளின வேளே.

79 அருந்தாதை யளியருந்து மகிழ்மாறர் மகிழ்மாற னாக யோகம், வருந்தாவை வகைப்புலன்கள் களிக்கவறக் கட்டளைகள் வகுத்தல் செய்தான், தருந்தாதைப் பட்டமுடை யான்புதல்வன் றனதுதந்தை தமைய னை, பெருந்தாதை முட்டமுடை யானே னுஞ்சங் கரமூர்த்தி பெருமை யோனே.

80 பாவல ரதிபதியாம் பாமாற னுலாவிவரத்
தாவிய கதிர்மணிசூழ் தந்தச் சிவிகைசெய்தான்
நாவலர் சூழாதி நாதன் றருமறையோன
கோவியர் சூழ்மாமால குளத்தூரன் முகிலே.

81 செங்குளத்தி லைங்கோட்டை கற்குளத்தி ரெழுகோட்டை செய்நா லாறு, தங்கியகோட் டைகள்வீர கோளப்பே ரியுட்சேர்த் துச் சாங்கற் பூரம், பொங்குகளப ஞ்சலவை சுருள்பட்டுப் பள்ளி யறை பொலியச் செய்தான், மங்கையர்த மிலகிதவே ளெங்கள் கா ளத்தியப்பன் மங்கை வேந்தே.

82 முன்னன்ன வாகனந்தான் வெள்ளியினாற் குறைபடா முறைமை நாடிப், பொன்னன்ன வாகனமோர் பாதியின்மேற் செய்துமுழுப் புகழே பெற்றான், துன்னன்ன தானமுதல் எலலாக்

---

78 மறையவன் நாரணன்மகன் கணக்கு வேங்கிப்பிள்ளை, மாறருக்கு ரத்தினமுடியும் பாகையும் கோரம்பமும் அன்னப்பதக்கமும் செய்தார்.

79 சங்கரமூர்த்தி என்பவர், ஆழ்வாருக்கு அறக்கட்டளை வகுத்தார்.

81 சிவலமங்கைமன்னர் காளத்தியப்பமுதலியார் என்பவர் செங்குளத்தில் 5 கோட்டை, கற்குளத்தில் 14 கோட்டை, வீரகோளப்பேரியில் 24 கோட்டை விளைவயல் அளித்துச் சாம் கற்பூரம், களபம், சலவை, சுருள், பட்டு, பள்ளியறை பொலியச்செய்தார்.

82 மணவைமன்னன் நல்லபெருமாள் என்பவர் அன்னவாகனம் வெள்ளியினாலியன்றது குறைப்டாமல ஒருபாதிகுமேல் பொன் அன்னவாகனஞ்செய்து புகழடைந்தார்.

தன் வார்த்தையினுற் றுலங்கச் செய்வோன், மின்னுநகைப் பினர் வேளா நல்லபெரு மாளென்னும் மணவைடவேந்தே.

83 வித்தகனா வீறனார் பவனிவரு வெள்ளெகின மேற்பொன் னுக, நித்தநினை நல்லபெரு மாள்மகிப னினைத்தபடி நெடுநீர் ஞாலம், எத்திசையுங் கொண்டாட முழுதுமே பொன்னுக விளங் கச்செய்தான், முத்தமிழ்தேர் முத்தப்பன் தாண்டவரா யன்கருணை முகத்தோன் றுனே.

84 அரவுதிருப் புளியாகக் கொண்டமகிழ் மாறருலாம் அணி கொள் சோதி, விரவுசொன்ன விதச்சிவிகை தோப்பிலே யெழுந்த ருள விளங்கச்செய்தான், இரவுபக லாக்குமெம்மால் வானமா மலை முனிவ னிணைப்பூம பாதம், பரவுதிரு வேங்கடரா மானுசராம் சீயர் முக்கோற் பகவர் கோவே.

85 எந்தத்தோ ளுக்கினியா னும்மிதனுக் கிணையாக விசையா தென்றே, தந்தத்தோ ளுக்கினியா னுதிமா லெழுந்தருளத் தயவா யிந்நாள், சொந்தத்தோ டேபொருளால் வாஸிபத்தி லேகீர்த்தி துலங்கச் செய்தான், அந்தத்தா மக்கமல லட்சுமிசொல் மூர்த்தி யென்னு மாசு ரேறே.

[தொடரும்.]

---

83 முத்தப்பன் தாண்டவராயன் என்பவர், வெள்ளியன்னம் பாதி நல்லபெருமாளால் பொன்னுக்கப்பட்டதை முழுவதும் பொன்னுகப் பொருந் தச்செய்தார். இதற்குப்பின்னுல் ஸ்ரீ வானமாமலை ஜீயர்ஸ்வாமியால் முழு வதும் பொன்னுற்செய்து சமர்ப்பித்ததும் உண்டு. பிள்ளையன் குடும்பத்தா ரால் வெள்ளியினுற்செய்து சமர்ப்பிக்கப்பட்ட மற்றென்றும் உபயோகத்தில் உள்ளது.

84 வானமாமலைஜீயர் பரம்பரையில் திருவேங்கடராமானுஜஜீயர் ஆழ் வார் தோப்பில் எழுந்தருளப் பொற்சிவிகை செய்தளித்தார். இதற்குத் தோப்புப்பல்லக்கு எனப்பெயர்.

85 மூர்த்தி என்பவர் ஆதிநாதருக்குத் தந்தத்தோளுக்கினியான் செய் தார்.

198 மார்பி லிருந்த வனசத் திருவுடனே
சேரவிளை யாடவென்னைச் சேருமென்றாள்—நேரிழையாய்

199 அண்டந் திரண்முத்த மாகவடு சோறமைத்து
வண்ட லிழைக்குமொரு வல்லிகாண்—பண்டைமறை

200 தேடியுங்கா ணாதவளைத் தீண்டவெளி தோவென்றார்
சூடவன மாலைதாச் சொல்லுமென்றாள் —பீடுடையான்

201 பன்மாத் திரளண்டம் பண்ணுதற்குக் காரணமாந்
தன்மாத் திரையான தாரென்றார்—அன்னைமீர்

202 மன்றலையில் வைத்த மணிமுடிவாங் கிச்சற்றே
தன்றலையில் வைக்கத் தருகவென்றாள்—ஒன்றறியா

203 மின்னே யுபய விபூதிதனை யாளுதற்கு
முன்னே யமைத்த முடியென்றார்—பின்னையாள்

204 ஊற்றுவழி கண்ணீ ரொழுகநின்றா ளம்மனைமார்
போற்றி யெடுத்தணைத்துப் போயினார்—கீற்றுவரிச்

---

198 வனசத்திரு - தாமரைமலரிலுள்ள இலக்குமி.

199 அண்டம் - உலகம். அடுசோறமைத்து - சிறுசோறட்டு. வண்டல் - மகளிர்விளையாட்டு.

200 வனமாலை - துழாய்மாலை. பீடு - பெருமை. பீடுடையான் - பெருமையுடையவனான சிறுபுலியூர்த் திருமால்.

201 பன்மாத் திரள் அண்டம் பண்ணுதற்கு - பலவாகிய பெரிய அண்டகோளங்களைப் படைத்தற்கு. தன்மாத்திரை - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற மூலப்பொருள்களின் அடையாளம். தார் - மாலை.

202 மன் - சிறுபுலியூர்த்திருமால்.

203 உபயவிபூதி - நித்தியவிபூதியும் லீலாவிபூதியும்.

181—204 பேதையொருத்தி மூரலாள் (185), குழலினாள் (186), கண்டுயிலாள் (187), பேசுவாள் (188), போதிப்பாள் (190), ஆகி, கன்னல்முத்தும் செந்நெல்முத்தும் (191), பொருநைமுத்தும் காவேரி முத்தும் (192), முற்றிலும் தூதையுங்கொண்டு முகந்துய்த்துச் சிற்றி லிழைத்து வீதியில் (193), தொடியார்பண்ணையில் வண்டல்பயில்காலை, அருமாகடலமுதம தோன்றுதலும் பணித்தாள் (194-195), தருகவென்றாள் (196), சேருமென்றாள் (198), சொல்லுமென்றாள் (200), தருகவென்றாள் (202), ஒழுகநின்றாள் (204) என வினைமுடிவுகொள்க.

205 சங்க முழங்கத் தடங்தேரி னிற்புலியூர்
எங்கள் பெருமானு மேகினார்—அங்கசனும்

206 தேவாதி தேவன் றிருத்தே ருடனடந்து
பூவாளி பூட்டாம ... ... முற்றும்—மூவாப்

பேதும்பை.

207 பேதும்பை யொருத்தி பெருகவிருங் காத
... . லைமுகொண்டாள்—கதம்பயில்போர்

208 ஈரொன் பதுநா ளிழைத்தகளம் ....
காரொன்று தாமக் கருங்குழலாள்—மாரவேள்

209 மட்டுப் பொதிந்த மலர்க்கமல வாளியுரம்
பட்டுப் படாத பருவத்தாள்—நெட்டிலைய

210 பூங்கரும்பன் சூதம் பொருதற்கு நாட்பார்க்க
வாங்கரும்பித் தோன்று மணிமுலையாள்—பாங்கரும்பு

211 நாணு நிறையு நடையழகு மெய்யெழிலுங்
காணுமொரு தோற்றமுள்ள காட்சியாள்—வேணவா

204—205 இற்று உவரிச்சங்கம் - வரிகளையுடைய கடற்சங்கு. அங்க சன் - மன்மதன்.

207 பெதும்மை - 8வயதின்மேற் 11 வயதுவரையுள்ள பெண். கதம் பயில் - சினம் மிக்க.

208 கார் ஒன்று-மேகத்தைபொத்த. தாமம் - குழலிற்சூட்டும் மாலை. குழல் - கூந்தல். மாரவேள் - மன்மதன்.

209 மட்டுப்பொதிந்த - தேனைத் தன்னுட்கொண்ட. கமலமலர் வாளி - தாமரைப்பூவாகிய அம்பு. உரம் - மார்பு. கமலமலர்வாளி யுரம் பட்டுப் படாத பருவத்தாள் எனவே, சிறிதே காமம் அரும்பியநிலையினள் என்றவாறாயிற்று. நெட்டிலைய - நீண்ட இலைகளையுடைய.

210 பூங்கரும்பன் - பொலிவுமிக்க கரும்புவில்லையுடைய மன்மதனது. சூதம் - தேராகிய தென்றல். பொருதற்கு - (பெதும்பையைத்)தாக்குதற்கு. ஆங்கு - அப்பொழுதே. அரும்பி - மொட்டின்தன்மையுடையதாகி. பாங்கு அரும்பும் - நன்றாக உண்டாகிய.

211 நிறை - கற்பு. மெய்யெழில் - உடலழகு.

212 மார்க்கமுஞ் சூதும் மதன்கலையும் வந்துவந்து
பார்க்கும் விரகப் படைவிழியாள்—போர்க்காம
213 வேளாக மத்தை விரிக்குமட வார்குழுவில்
வாளா விருந்து மனக்கொள்வாள்—நாளமலர்
214 அன்னமு மானுங் கிளியு மணிமயிலும்
துன்னிய பூவையுந் தோழியரும்—பின்னேகச்
215 சக்கர தீர்த்தத் தடஞ்சோலை மண்டபத்திற்
புக்கிருந்து மாறன் புகழ்பாடி—மிக்க
216 திருமா மகளருளின் சீர்பாடி யாதி
அருமா கடலமுதை யார்ந்து—பெருமான்சீர்த்
217 தென்னரங்கம் பாடித் திருவேங் கடம்பாடி
மன்னுபுகழ்க் கச்சி வளம்பாடி—யின்னபதி
218 நூற்றெட்டும் பாடி நுவன்றதமி ழாழ்வார்கள்
போற்றிட்ட வேதப் புகழ்பாடித்—தோற்றம்

211—12. வேணவா மார்க்கம் - வேட்கைப்பெருக்கின் நெறி. மதன் கலை-காமநூல். விரகம்-காமநோய். படை விழி-வாளாயுதம் போன்ற கண்.

212—13 போர்க் காமவேள் ஆகமத்தை - கலகஞ்செய்கின்ற மன்மதனுடைய காமநூலை. விரிக்கும் - விளக்கிப்பேசும். மட.வார்குழுவில் மகளிர்கூட்டத்தில். வாளா இருந்து - பேசாதுதங்கி. மனக்கொள்வாள் — மனத்துக்கொள்வாள், வேளாகமத்தை மனத்துக்கொள்வாள் என்க. நாளம் - தண்டு.

214 அணி - அழகிய. துன்னிய - நெருங்கிய. பூவை - நாகணவாய்ப்புள். பின் ஏக - பின்வர.

215 சக்கரதீர்த்தம் - சிறுபுலியூரிலுள்ளதொரு புண்ணியதீர்த்தம். இந்நூலின் 27-ஆங்கண்ணி பார்க்க. மாறன்புகழ் - மால் தன் புகழ்=திருமால்சீர். தன் சாரியை.

216 திருமாமகள் - இலக்குமி. ஆதி - உலககாரணனாகிய. அருமா கடல் - சிறுபுலியூர்த்திருமால். ஆர்ந்து - குணானுபவம்பண்ணி.

217 கச்சி - காஞ்சிபுரம். இதனுள் அரங்கம் வேங்கடம் கச்சி என்ற மூன்றும் சிறப்புடைமைபற்றி முற்கூறப்பட்டன. இன்ன - இப்படிப்பட்ட.

217—218 பதி நூற்றெட்டும் - நூற்றெட்டுத் திருமால்பதிகளும். நுவன்ற - பேசிய.

219 திருமா லெடுத்த திருவவதா ரத்தின்
பரியாய முள்ளதெல்லாம் பாடித்—திருமால்

220 இடங்கை வலம்புரியோ டேய்ந்தவளை முத்தம்
குடங்கை தனிலெடுத்துக் கொண்டு—தடங்கா

221 அரங்க விமானமென்ன வானவெழுத் தொன்றும்
இருங்குறளாய் நீண்ட விரண்டும்—நெருங்குபதம்

222 மூன்று மதனை மொழியு மறைநான்கும்
ஆன்றபொரு ளைந்தும் பதமாறும்—தோன்றுதிரு

223 வாசிரிய மேழுங் கழங்காடிப் பாடுதலும்
பூசுரர்க ளாசி புகழ்ந்தேத்தத்—தேசுபொலி

---

219 பரியாயம் - பிறிது.

220 இடங்கை வலம்புரியோடு ஏய்ந்த வளைமுத்தம் - இடக்கையிலே யுள்ள வலம்புரியோ டொப்புமைவாய்ந்த சங்கத்திற்பிறந்த முத்தினை. குடங்கை - அகங்கை = உள்ளங்கை. தடம் கா - பெரிய சோலை (சூழ்ந்த).

221 அரங்க விமானமென ஆன எழுத்து ஒன்று என்றது பிரணவத்தினை. அரங்கவிமானம் ஓம் என்னும் பிரணவவடிவமைந்ததாதலின். இரும்-பெருமையுடைய. குறளாய் நீண்ட இரண்டும்-குறளுருவாய்நீண்டத்வயமும். த்வயமென்பது (1)ஸ்ரீமந்நாராயணசரணௌசரணம் ப்ரபத்யே (2) ஸ்ரீமதே நாராயணாயநம: என இரண்டுவாக்யமாக அமைந்ததனைக் குறிக்கும்.

222 பதம் மூன்று என்றது இங்கே 'ஓம் நமோ நாராயணாய' என்ற மூன்று சொற்களை. ஆன்ற - நிறைவுடைய. பொருள் ஐந்தென்றது அர்த்த பஞ்சகத்தை. அர்த்தபஞ்சகமாவன:- இறைநிலை, உயிர்நிலை, உயிர் இறைவனை யடையுமாறு, விரோதிநிலை, புருஷார்த்தநிலை என்பன. பதம் ஆறு என்றது ஆறுஆறுசொற்களால் பூர்வகண்டமாகவும் உத்தரகண்டமாகவும் பிரித்துரைக்கப்பட்ட சரமசுலோகத்தை.

222—23 சடகோபர் அருளிய திருவாசிரியத்துள் திருமந்த்ரம் த்வயம் சரமஸ்லோகம் என்கிற ரகஸ்யத்திரயத்தாலும் சொல்லப்படும் பொருளனைத்தும் புலப்படுதலின் "எழுத்தொன்றும் ... ... பதமாறும் தோன்று திருவாசிரியம்" என்றார். கழங்கு - கழற்காய். பூசுரர் - பார்ப்பார். ஆசி - வாழ்த்து. தேசுபொலி - விளக்கம் மிக்க.

207—223. குழலாள் (208), பருவத்தாள் (209), முலையாள் (210) காட்சியாள் (211), விழியாள் (212), கொள்வாள் (213), ஆகிய பெதும்பை

224 யம்பொன் மணித்தேரில் அஞ்சனைசெல் வன்பிடர்மேல்
எம்பெருமான் வீதி யெழுந்தருள—கம்புமனக்

225 காதல......கழங்கா டலையொழிந்து
மாதருடன் சென்று மறுகணைந்து—சீதரனார்

226 தோளும் சுடர்முடியுஞ் சோதித் திருமுகமும்
தாளுஞ் சிலம்புந் தடமார்பும்—நாளு

227 ....புயமு மெங்களரு மாகடல் போழுகும்
பருகுவபோற் கணின்றிருமார்பி ?

228 ... ...
லெண்கவரு மந்தமறு வேவென்றாள்—தண்கடல்சூழ்

229 இந்த ......தை யெம்பெரு மாட்டிதனைக்
கந்தப் புரமா யமைந்ததென்றார்—பைந்தொடியார்

230 சொல்லு மளவிற் சுருதிப் பறைகறங்கப்
பல்லியங்க ளார்ப்பப் பாக்தாமன்—மெல்லியலை

231 மெள்ள நகைத்து விழியாற் கடைக்கணித்துப்
புள்ளரயன் றேர்வீதி போந்தகன்றான்—மெள்ளமதன்

யொருத்தி (207), புக்கு இருந்து பாடி (215–16), ஆர்த்து (217), பாடி (217-219) கொண்டு, (220), கழங்காடி, திருவாசிரியம் எழும் பாடுதலும் (223) என முடிக்க.

224 அஞ்சனைசெலவன் - சிறியதிருவடி = அநுமான்.

225 மறுகு - வீதி. சீதரன் - ஸ்ரீதரன் = திருமகளை (மார்பில்) தரித்தவன். ஆர் சிறப்புக்குறித்துநின்றது.

226 சுடர்முடி - ஒளிர்கின்ற கிரீடம். தடம் - பெரிய.

229 எம்பெருமாட்டியென்றது திருமகளை. அந்தப்புரம் - உள்வீடு = மகளிர்இருக்கை. பைந்தொடியார் - பசுமையான (பொன்னாலாகிய) வளைகளை யணிந்த மகளிர்.

230 சுருதிப்பறைகறங்க - வேதமாகிய பறை முழங்க. பல் இயங்கள் ஆர்ப்ப - பலவகை வாத்தியங்களும் ஒலிக்க. பாக்தாமன் என்றது சிறுபுலியூர்த்திருமாலை. மெல் இயலை - மென்மைத்தன்மையுடையவளாகிய பெதும்பையை.

231 கடைக்கணித்து - கருணைசெய்து. மதன் - மன்மதன்.

232 கொய்தமலர்ப் பூங்கணையிற் கோலமலர் வாளியொன்றும்
எய்து தொடைமடக்கி யேகினான்—செய்யமுகைக்

மங்கை

233 கொங்கை மடவார் குழுவிற் குயில்போலும்
மங்கை யொருத்தியிள வஞ்சியாள்—செங்கை
234 வரிசிலைவே ளுக்கு மதனகலை யெல்லாம்
தெரியவுரை யிட்டுணர்த்துந் தெய்வம்—பிரியாக்
235 கொலையுங் களவுங் கொடுவிடமுங் காமக்
கலையுங் குடிகொண்ட கண்ணாள்—அலையெறியும்
236 பேரழகு வெள்ளப் பெருக்கில் விளையாட
மாரனுஞ் செவ்வி மடமானும்—சீரியகைக்
237 கொண்டகுடம் போலுமிரு கொங்கையா ளுந்திமலர்
வண்டொழுக்க தாய்ரோம வல்லியாள்—கண்டோர்

---

232 கொய்த - பறித்த. கோல மலர் வாளி ஒன்றும் எய்து - அழகிய தாமரைமலராகிய அம்பொன்றினையும் பிரயோகித்து. பெதும்பைப்பெண் காதல்சிறிதேயரும்பும்பருவத்தினளாதலின் அவள் கண்ட தலைவன் நினைவை யெழுப்பும் தாமரை மலரம்பு ஒன்றைமட்டும் எய்து என்றார். 'நினைக்கும் அரவிந்தம்' என்பவாகலின். தொடை - அம்புதொடுத்தலை. மடக்கி - நிறுத்தி. ஏகினான் - சென்றான். செய்ய - செம்மையுடையவாகிய. முகை - மொட்டு.

225—231 பெதும்பை கழங்காடலையொழிந்து, சென்று, அணைந்து (225), என்றாள் (228)ஆக, பைந்தொடியார் என்றார் (229), பைந்தொடியார் சொல்லுமளவில் (230), பரந்தாமன் நகைத்து, கடைக்கணித்து, அகன்றான் (231) என முடிக்க.

233 கொங்கை - தனம். மடவார்குழுவில் - பெண்கள்கூட்டத்தில். வஞ்சி - கொடி.

234 வரிசிலை - கட்டமைந்தவில். மதனகலை - காமநூல். உரையிட்டு - விரிவுரைசெய்து.

236—37 மாரன் - மன்மதன். செவ்வி மட மான் - அழகும் இளமையும் வாய்ந்த மான்போல்பவளாகிய இரதி. மதனனும் இரதியும் அழகாகிய வெள்ளப்பெருக்கில் நீந்துதற்குக்கொண்ட குடங்கள்போலும் இரண்டு கொங்கைகளையுடையாள் என்றபடி. உந்திமலர் - கொப்பூழ்த்தாமரை. உந்தியாகிய தாமரையின்கட்செல்லும் வண்டின்வரிசைபோன்ற உரோமவல்லியினையுடையாள் என்க. ஒழுக்கது - ஒழுக்கு; அது நிலைமொழிப்பொருட்டு. வல்லி - கொடி.

238 மணங்கவருஞ் சோதி வதனத்தாள் வெற்றி
யனங்கன்முடி சூடுமபி டேகம்—அனங்கன்

239 படைக்குடைந்த காமுகர்கண் பார்க்கினிலம் பார்த்துக்
கடைக்கணிட்டு நோக்கியகள் ளத்தாள்—விடைக்கொடியோன்

240 நெற்றி விழியழலி னீறான வேடனுக்கு
வெற்றி கொடுக்கும் விரகினாள்—முற்றுநீ

241 ராசை யளவி லடங்காம லாடவர்தம்
ஆசை யெனப்பரந்த வல்குலாள்—கேசவனை

242 யல்லாத தேவ ரளித்தவரம் போற்சிறிதும்
இல்லாது தேய்ந்த விடையினாள்—எல்லையில்லாத்

243 தோழியருந் தானுமொரு சோலையிடத் தேகிமணி
யாழிவண்ணன் போரா யிரம்பாடிக்—கேழ்கிளரும்

244 நித்திலப்பூங் கொத்து நிரைத்தமணிப் பந்தெடுத்துக்
கைத்தல மேந்திக் கனங்குழையாள்—சித்ரமுலைச்

---

238 வதனம் - முகம். அபிடேகம் - கிரீடம். அநங்கன் - அங்கமில்லாதவன் = மன்மதன்.

239 படைக்கு - படையால்; உருபுமயக்கம். உடைந்த - தோல்வியுற்ற. காமுகர் - காமநோயுடையார். விடைக்கொடியோன் - இடபக்கொடியுடைய சிவபெருமானுடைய.

240 அழலின் - நெருப்பினால். நீறு - சாம்பல். வேடனுக்கு - வேள்தனக்கு = மன்மதனுக்கு; தன் சாரியை. விரகு - அறிவு. நீர்முற்றும் என மாறிக்கூட்டிக் கடலாற்சூழப்பட்ட எனப் பொருள்கொள்க.

241 ஆசை - திசை. ஆசை - விருப்பம். அல்குல் - நிதம்பம். கேசவன் - திருமால்.

233—42 வஞ்சியாள் (233), தெய்வம் (234), கண்ணாள் (235), கொங்கையாள், சோமவல்லியாள் (237), வதனத்தாள் (238), கள்ளத்தாள் (239), விரகினாள் (240), அல்குலாள் (241), இடையினாள் (242), ஆகிய மங்கையொருத்தி (233) என இயைக்க.

243 மணி - அழகிய. ஆழிவண்ணன் - கடல்வண்ணன் = திருமால். கேழ்கிளரும் - நிறம் விளங்குகின்ற.

244 பூங்கொத்துநிரைத்த மணி நித்திலப்பந்து என மாறிக் கூட்டிப் பூங்கொத்துக்கள் வரிசையாக வரையப்பட்ட அழகிய முத்துப்பந்து எனப் பொருளுரைக்க. கனங்குழை என்றது மங்கையை.

245 செப்புக் குவமை சிறந்ததிது வோவென்று
தப்பிப் ....டிக்குந் தன்மைபோல்—மொய்ப்பவரி
246 வண்டு துதைந்து ... ...
.... கொண்டை யவிழ்ந்து குலைந்திட—வண்டு
247 கரங்களி னின்று கலன்கல னென்று
நிரந்தொலி பம்ப நிமிர்ந்து—நெருங்கு
248 குரும்பை நிகர்ந்து குவிந்தெழு கொங்கை
யரும்பு குலுங்க வசைந்து—மருங்குல்
249 வருந்தி யொடுங்கி வளைந்திறு மென்று
புரிந்து சிலம்பு புலம்ப—நிரந்த
250 இருங்குழை தண்ட வெறிந்து மறிந்து
கருங்குழல் சென்று கடந்து—திரும்பிய
251 கண்கள் சிவந்து கலந்த நலந்தரு
வண்கை சிவந்து வருந்திட—நண்பில்
252 எழுந்து மறிந்து விழுந்தெழு பந்தை
அழுந்த கரங்கொ டறைந்து—சுழன்று
253 பதங்கள் பெயர்ந்து பெயர்ந்து படர்ந்து
கதப்ப மளைந்து கமழ்ந்து—பதங்கொள்

---

246 துதைந்து - நெருங்கி. கொண்டை - குழலின்முடி. வண்டு - சங்கவளை

247 கரங்கள் - கைகள். நிரந்து - ஒழுங்குபட்டு. பம்ப - நிறைய.

248 குரும்பை - தெங்கின் இளங்காய். நிகர்ந்து - ஒத்து. கொங்கை, யரும்பு - தனமாகிய மொட்டு. குலுங்க - அசைதலால். அசைந்து - இளைத்து. மருங்குல் - இடை.

249 இறுமென்று - ஒடியுமென்று. புரிந்து - விரும்பி. நிரந்த - ஒழுங்குபட்ட.

250 குழை - காது. தண்ட - கெட. மறிந்து - மீண்டு.

252 கரங்கொடு அறைந்து - கையால் அடித்து.

253 பதங்கள் - கால்கள். படர்ந்து - சென்று. கதப்பம் - பரிமளப்பொடி. அளைந்து - பூசப்பட்டு. பதம் - ஒளி.

254 உடம்பு புழுங்க வுணங்கி வணங்கி
இடங்க ளிடங்களி லெங்கும்—நடந்துவரிப்
255 பந்தாடிப் பாடவுயிர்ப் பாங்கியருந் தோழியரும்
அந்தோ விடையொடிந்த தாமென்று—வந்தணைத்துப்
256 பொன்னனை மேனிப் புழுதித் துகண்மாற்றி
மின்னுண் முகத்து வியர்வாற்றி—அன்னமே
257 எங்கள் குலத்துக் கரசே யிளையோர்கள்
தங்கள் குலத்துத் தவப்பேறே—செங்கமல
258 வேதியனார் நாலுமுக மானதுவும் வேணியரன்
பாதி யுடம்பாகப் பட்டதுவும்—மூதுலகில்
259 இந்திரனா ராயிரக்க ணெய்தியதும் நாடோறுஞ்
சந்திரனார் தேய்ந்து தளர்ந்ததுவும்—செந்தழலில்
260 மூழ்கிமத னங்க முடிந்ததுவுங் கோதமனார்
ஆழ்புனலின் மூழ்கி யமிழ்ந்ததுவும்—தாழ்சடையோர்

254—55 உணங்கி - வாடி. வரிப்பந்து-கோலம்வரையப்பட்ட பந்து. அந்தோ - ஐயோ.

243—255 கனக்குழையாள் (244), ஏகி, பாடி (243), எடுத்து, ஏந்தி (244), குலைந்திட (246), குலுக்க (248), புலம்ப (249), வருந்திட (251), அறைந்து (252), நடந்து (254), ஆடிப் பாட (255) என முடிக்க.

256 புழுதித்துகள் - புழுதியாகியதுகள். மாற்றி - போக்கி. மின்னுள் - மங்கை.

257 இளையோர்கள் - இளைஞர்கள். பேறு - பயன். கமலம் - தாமரை.

258 வேதியன் - பிரமன். ஆர் - சிறப்புப்பொருட்டு. வேணி - சடை. அரன் - சிவபிரான். மூதுலகில் - பழமையானவுலகில்.

260 மதன் - மன்மதன். அங்கம் முடிந்தது - உடலிழந்தது. கோதமன் - கௌதமமுனிவன். கௌதமன் புனலின்மூழ்கியமிழ்ந்தது அகலிகையைப் பெறும்பொருட்டு. கௌதமனும் இந்திரனும் அகலிகையைக் காதலித்தனராக, அகலிகை நும்முள் நெடுநேரம் புனலின் மூச்சடக்கி மூழ்கியிருப்பார்க்கே யான் உரியேன் என இருவரும் புனலின்மூழ்கிநிற்க, இந்திரன் மூச்சடக்க இயலாது முன்னேவெளிப்படக் கௌதமன் பின்னெழுந்து அகலிகையைப் பெற்றனன் என்பது கதை. சடையோர்-சடையையுடைய முனிவர்கள்.

261 காயஞ் சருகாகக் கானகத்தும் வெற்பகத்தும்
தூயதவஞ் செய்யத் தொடங்கியதும்—சேயிழையாய்
262 உன்னுடைய பெண்மைநல முண்ணப் பெறுமையன்றே
இன்னமுமவ் வண்ண மிருக்கின்றார்—என்னும்
263 அளவிற் சிறுபுலியூ ரண்ணல்பாற் றாமன்
துளபத் தொடையழகு தோன்ற—வளமிக்க
264 ஆயிரவாய்ச் சேடனணைமீ தினிதிருந்து
பாயிரநால் வேதப் பறைமுழங்கப்—பாயிருளைக்
265 காயுந் திகிரிசங்குங் கையுந் திருமுகமும்
சேயிதழ்த் தாமரையஞ் சேவடியும்—வேயூது
266 செம்பவள வாயுந் திருநகையுந் தோன்றமணிச்
செம்பதும ராகத் திருத்தேர்மேல்—எம்பெருமான்
267 வீதி யெழுந்தருளி வேதியர்க டற்சூழப்
போது மளவிற் புனையிழையாள்—கோதியளி

---

261 காயம் - உடல். சருகாக - சருகின்றன்மையையடைய மெலிந்து வற்ற. கானகத்தும் - காட்டிலும். வெற்பகத்தும் - மலையிலும்.

263 துளபத்தொடை - துழாய்மாலை.

255—263 பாங்கியரும் தோழியரும் வந்தணைத்து (255), மாற்றி, ஆற்றி, அன்னமே (256), அரசே, தவப்பேறே (257), சேயிழையாய் (261), ஆனதுவும், பட்டதுவும் (258), எய்தியதும் தளர்ந்ததும் (259), முடிந்ததுவும், அமிழ்ந்ததுவும் (260), தொடங்கியதும் (261), உன் பெண்மைநலம் உண்ணப்பெறுமையினாலன்றே, அதனானன்றே இன்னமும் அவ்வண்ண மிருக்கின்றார் என்னும் அளவில் (262—263) என முடிவுகொள்க.

264 சேடன் அணை - சேடனாகிய அணை, பாயிரம் - முகவுரை = உபோற்காதம். பாயிருள் - பரவிய இருள்.

265 காயும் - சினந்தோட்டுகின்ற. திகிரி - சக்கரம். சேயிதழ்த் தாமரையஞ்சேவடியும் - செவ்விய இதழ்களையுடைய தாமரைமலர்போன்ற அழகிய திருவடியும். வேய் என்றது இங்குப் புல்லாங்குழலை.

266 திருநகை - அழகிய புன்சிறிப்பு. பதுமராகம் - மாணிக்கம்.

267 புனையிழையாள் - அணிகலன்களையணிந்தவளாகிய மங்கை. கோதி - குடைந்து. அளி - வண்டு.

263-267 சிறுபுலியூரண்ணல், அழகுதோன்ற இனிதிருந்துபறைமுழங்க (264), கையும் திருமுகமும் சேவடியும் (265), வாயும் நகையும் தோன்றத் திருத்தேர்மீது (266), வீதியெழுந்தருளிப்போதுமளவில் (267) என முடிக்க.

268 பூதகுழற் ... ... லைய
மோதுங் களப முலையசைய—மாதருடன்
269 சென்று வணங்கிச் செழுந்தடக்கை கூப்பியெதிர்
நின்று மடநா ணிறையழிந்தாள்—குன்றனை
270 தோளொருத்தி மார்பொருத்தி தோய்ந்தா லுமக்கேவ
லாளொருத்தி நானா லாகாதோ—வாளுருத்த
271 கண்ணார்க ளாய்ப்பாடிக் காரிகையார் தம்மொடொரு
பெண்ணாக வெண்ணிற் பிழையாமோ—தண்ணார்ந்த
272 வள்ளத் திருப்பவள வாய்முத்தந் தந்தாலென்
உள்ளத் துயர மொழியேனோ—வெள்ளத்தின்
273 ஆலினிலை மேற்கிடந்த வாகந் தனைத்தழுவிக்
கோலமுலை மேலணைத்துக் கொள்ளேனோ—கோலமதன்
274 றன்கைவளை வில்லாற் சரமாரி தூவமெலிந்
தென்கைவளை யெல்லா மிழந்தேனே—முன்கடலைக்
275 கற்கொண்டு தூர்த்தீரென் காமக் கடலையொரு
சொற்கொண்டு தூர்க்காற் சுவறாதோ—விற்கொண்ட
276 தோளுடையீர் மூன்று தொழிலுடையீ ரைம்முகனை
ஆளுடையீர் கண்ணி னருளுடையீர்—வேளுடைய

---

268 களபம் - கலவைச்சாந்து.

269 மடமும் நாணும் நிறையும் அழிந்தாள் என உம்மை விரிக்க. குன்று-மலை.

270 நான் ஒருத்தி உமக்கு ஏவலாளானால் ஆகாதோ எனக் கூட்டுக. வாளுருத்த - வாளைச்சினந்த.

271 ஆய்ப்பாடிக்காரிகையார்தம்மொடு - திருவாய்ப்பாடிப் பெண்களுடன். தம் சாரியை. தண் ஆர்ந்த - குளிர்ச்சிபொருந்திய.

272 வள்ளம் - கிண்ணம். உள்ளத்துயரம் - மனத்துயர்.

273 ஆகம் - மார்பு. கோலமதன் - அழகியமன்மதன்.

274 சரமாரிதூவ - அம்புமழைபொழிய.

275 சுவறாதோ - வற்றாதோ ?

276 மூன்றுதொழில் - படைத்தல் காத்தல் அழித்தல் என்பன. ஐம்முகன் - ஐந்துமுகங்களையுடைய சிவபிரான்.

277 வில்லாண்மை பார்த்து விழிபார்த் தொருவார்த்தை
சொல்லாத தேதென்று சோர்வுற்றாள்—மெல்லியலைச்

278 சற்றே கடைக்கணித்துத் தண்முறுவல் செய்துபிரான்
பொற்றேருந் தானும் புடைபெயர்ந்தான்—மற்றொருவன்

279 தென்றலந்தே ரேறிச் சிறுகா ணொலிபரப்பி
மன்றலம்பூங் காவி மலர்வாளி—ஒன்றொழியப்

280 பல்லா யிரங்கணைகள் பாரித்துப் பாவையுட
லெல்லாந் துளைபட் டிடவெய்து—வில்லால்

281 அடித்துத் தரைப்படுத்தி யாங்கொழிய மாதர்
எடுத்துக் கொடுமனையி லேகி—உடுத்திரள்சூழ்

282 வெண்மதியின் றிண்மணியால் வேய்ந்தமணி மண்டபத்தி
னுண்மதன சாலையெனு மோரிடத்தில்—தண்மதிபாய்

283 சாளர வாயி லருகுதளி மம்படுத்து
வாளரவேற் கண்ணாள் வனப்பமைந்த—நீளிலைய

284 தேமாந் தளிருஞ் சிறுசண் பகமலரும்
தாமாங் கணைமீது தானிழைத்துப்—பூமாண்ட

285 கோழரைய வாழைக் குருத்துவிரித் துக்கிடத்தி
வாழியிவ ளென்னும் வகைகூறிக்—கேழ்கிளரும்

267—277 புனையிழையாள், சென்று வணங்கி அழிந்தாள் (269) ஆகி, ஆகாதோ (270), பிழையாமோ (271), ஒழியேனோ (272), கொள்ளேனோ (273), இழந்தேனே (274), சுவறுதோ (275), உடையீர் (276), பார்த்து (277), ஒருவார்த்தை சொல்லாதது எது? என்று சோர்வுற்றாள் (277) என முடிக்க.

278 மற்றொருவன் என்றது மன்மதனை.

279—80 காவி - நீலமலர். மன்மதனுடைய பஞ்சபாணங்களில் நீலம் கொல்வதாதலின் அதனையொழித்து மற்றவற்றை யெய்தானென்றார்.

281 உடுத்திரள் - நக்ஷத்திரக்கூட்டம்.

282 வெண்மதியின் திண்மணி - சந்திரகாந்தக்கல்.

283 சாளரம் - காலதர். தளிமம் - பாயல்.

284 தாம் அசை. ஆங்கு அணைமீது இழைத்து என்க. தான் அசை. பூமாண்ட - பூவான் மாட்சிமையுடைய.

285 கோழரைய - வழவழப்பான அடிப்பக்கத்தையுடைய. இது வாழைக்கு அடை. கேழ்கிளரும் - நிறம் மிக்க.

286 சந்தக் குழம்புஞ் சவாதும் பனிநீரும்
அந்தத் திருவுடம்பி லப்பினார்—செந்தளிர்கள்

287 காமாக் கினியிற் கருகி யுடல்வெதும்பச்
சோமாக் கினியுஞ் சுடவைத்தார்—தாமக்

288 குழலியொரு கட்டுவிச்சி கூடுகுறி பார்த்துச்
சுழல முடிதுளக்கிச் சொல்வாள்—எழிலுடைய

289 மானனையீ ரிந்த மடமான் பிணிதீர
ஆனமருந் தொன்று மறியீரோ—தேனருந்தி

290 வண்டு படியு மலர்த்துழாய் நீழலின்கீழ்க்
கெண்டையங்கண் ணாளைக் கிடத்துவீர்—கொண்டனிற

291 மாய னணிந்த மலர்த்துழாய் மாலையிவள்
தூய குழல்மீது சூட்டுவீர்—சேயிழையீர்

292 வாரார் முலையாள் வலதுசெவிக் கேயவன்பேர்
ஓரா யிரமு முணர்த்துவீர்—பேராளன்

293 சங்கு திகிரி தனுநாந் தகங்கதைவான்
கொங்கைமிசை தூரிகை கொண்டெழுதீர்—அங்கவன்றன்

294 பொன்னுடை வாங்கிப் புனையீ ரெனக்கேட்ட
மின்னாளம் மால்புயத்தை மேவினள்போல்—இன்னாமை

---

287 சோமாக்கினி - சந்திரனாகிய நெருப்பு. தாமம் - மாலை.

281—287 மாதர், ஏகி (281), படுத்து (283), இமைத்து (284), விரித்து, கிடத்தி, கூறி (285), அப்பினார் (286), சுடவைத்தார் (287) என்க.

288 கட்டுவிச்சி - குறிசொல்பவள். முடிதுளக்கி - தலையசைத்து.

292 வார் - கச்சு. வலதுசெவி - வலக்காது.

293 திகிரி-சக்கரம். தனு - வில். நாந்தகம் - வாள். கதை - தண்டாயுதம். வான்கொங்கைமிசை-சிறந்த தனத்தின்மேல். தூரிகை-எழுதுகோல்.

294 பொன்னுடை - பீதாம்பரம். புனையீர் - அணியின். மின்னாள் என்றது இங்கு மங்கையை. மால் - சிறுபுலியூர்த்திருமால். புயம் - தோள். இன்னாமை - துன்பம்.

288–94 கட்டுவிச்சி, குறிபார்த்து, சொல்வாள் (288) ஆகி, மானனையீர்! அறியீரோ? (289), கிடத்துவீர் (290), சூட்டுவீர் (291) உணர்த்துவீர் (292), எழுதீர் (293), புனையீர் என (294) என்று முடிக்க.

295 திர வெழுந்து தெளிவுற்றாள் பொற்பூணும்
ஆர வடமு மணிந்திருந்தாள்—ஏரார்

மடந்தை

296 மடந்தை யொருத்தி வனசமலர்ப் பாவை
யுடன்பிறந்த செவ்வி யுடையாள்—அடங்கா

297 அழகு படைத்தமுலை யாரமுதங் காமன்
பழகு ... ... டுத்தபஞ்ச பாணம்—புழுகு

298 மணக்குஞ் செழுந்தேன் மதன்மகுடங் ...
வணக்குமொரு கற்பகப்பூ வல்லி—இணக்கமரிற்

299 கோலத் திகிரிகொ ... ... தழைத்த
காலத்தை வென்ற கருங்குழாள்—மேலைநாள்

300 அண்டரிற வாம லரனார் மணிமிடற்றுக்
கொண்டதுபொய் யென்னுங் கொலைவிழியாள்-பண்டுவிரல்

301 ஊன்றிவிரல் பொத்தி விடுத்திசையூ தக்கானந்
தோன்றுகுலம் போன்றதடந் தோளினாள்—வான்றடவி

302 யாங்கு மழைபொழிய வாநிரைகாத் தன்றுபிரான்
தாங்கியது போலுந் தடமுலையாள்—ஓங்கியெழு

---

295 ஆரவடம் - முத்துமாலை. ஏரார் - அழகுபொருந்திய.

294—95 மின்னாள் எழுந்து தெளிவுற்றாளாகி, பூணும் வடமும் அணிந்திருந்தாள் என முற்றுவிக்க.

296 வனசமலர்ப்பாவை - தாமரைப்பூவிலெழுந்தருளியுள்ள திருமகள்.

298 வணக்கும் - வளைக்கும். இணக்கு அமரில் - இசைவித்தபோரில்.

299 கோலத்திகிரி - அழகிய சக்கரப்படை. காலம் - இரவு=இருள். மேலைநாள் - முன்னாள்.

300 அண்டர் - தேவர். அரனார் - சிவபெருமான். மணிமிடறு - மணிகண்டம். பண்டு - முன்பு.

301 வேய்ங்குழலூதுவோர் குழற்றுளையில் விரலையூன்றியும் விரல் கொண்டுமறைத்தும் மறைத்ததைவிடுத்தும் ஊதுதல் இயல்பாதலின் 'விரலூன்றி விரல்பொத்தி விடுத் திசையூத' என்றார் கானம்தோன்றுகுலம்- இசைபிறந்த வம்சம் - மூங்கில். தடம் - பெரிய.

302 ஆநிரை - பசுக்கூட்டம். பிரான் - கண்ணன். தாங்கியது - கோவர்த்தனம். ஓங்கி எழு - பெருகிக்கிளர்ந்த.

303 சேல்கிடந்த வெள்ளத் திரட்பெருக்கி லண்டமுண்டு
மால்கிடந்த பாயல் வயிற்றினாள்—சூல்கிடந்த

304 மையிடையிற் றோன்றி மறையு மவைபோல
நொய்ய சிறிய நுடங்கிடையாள்—வையமெல்லாம்

305 தாங்கி நிறைந்து தடந்திசையெல் லாம்பரந்
தாங்கு விரிந்தகன்ற வல்குலாள்—தாங்கமரில்

306 வாகை புனையு மகவான் புயந்தழுவும்
தோகைபெயர் கொண்ட துடையினாள்—மோகமலர்

307 அஞ்சிலம்பு பூட்டு மடல்வேள் முடிவணங்கி
யஞ்சிலம்பு பூட்டு மடியினாள்—அஞ்சிலம்பும்

308 வாவி மலரில் மடவன்னம் பின்னடந்து
காவினடை கற்கநடை கற்பிப்பாள்—கோவைவடம்

309 தாங்கு முலையிற் றனிமகர யாழணைத்துப்
பாங்குபெற வேழிசையிற் பாடுதலும்—பூங்காவி

310 வண்ணன் சிறுபுலியூர் மாயன் றிருத்தேர்மேற்
பண்ணமைந்த வேழப் பவனிவர—ஒண்ணுதலாள்

303-304 சேல் - மீனில் ஒருவகை. மால்கிடந்த பாயல் - ஆலிலை. சூல்கிடந்தமை - கருக்கொண்ட மேகம். மையிடையிற்றோன்றி மறையுமவை - மின். நொய்ய - மென்மையுடைய. நுடங்கிடை - துவளும் இடை.

305 அல்குல் - நிதம்பம். அமரில் - போரில்.

306 வாகைபுனையும் - வெற்றிமாலைசூடிய. மகவான் - இந்திரன். மகவான்புயந்தழுவுந்தோகை பெயர் - அரம்பை. அது இங்கே வாழைத் தண்டையுணர்த்திநின்றது. வாழைத்தண்டுபோலும் துடையினாள் என்றபடி.

306-307 மோகமலர் அஞ்சில் அம்புபூட்டும் அடல்வேள் - ஆசையை விளைக்கின்ற ஐந்துபூக்களால் அம்புபூட்டும் வலிய மன்மதன். அம் சிலம்பு பூட்டும் அடியினாள் என்க. சிலம்பு - கால்விரலணி. அம் சிலம்பும் நீர் - ஒலிக்கின்ற.

308 கோவைவடம் - முத்து மணி முதலியவை கோக்கப்பட்ட மாலை.

309 மகரயாழ் - மகரமீன்வடிவாகச்செய்யப்பட்ட யாழ். ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை.

310 வேழப்பவனி - யானைமீதுவரும் உலா.

311 பாட லொழிந்தெழுந்து பாங்கியருந் தானுமெதி
ரோடி வணங்கி யுளமெலிந்தாள்—ஓடைநெடுங்

312 கைவா ரணங்காத்தா னென்று கரங்குவித்துக்
கைவா ரணமதனை ... ...ன்றாள்—நொய்யவிடை

313 சோர்ந்த மணிக்கலையுந் தோளிவிடு ...
எந்தெழிலு நாணு மிழந்தொழிந்தாள்—பூந்துவரை

314 மன்னன் சிறுபுலியூர் மால்மதனைக் கண்காட்டி
இன்னகைசெய் தோர்வீதிக் கேகினான்—அன்னாளைத்

315 தாங்கி யெடுத்தணைத்துத் தாய்மாருந் தோழியரும்
தேங்கமழும் பூவணையிற் சேர்த்தினார்—ஆங்கே

அரிவை.

316 அரிவை யொருத்தி யமுதமுஞ்செந் தேனும்
பரிமளமுஞ் சர்க்கரையும் பாகும்—விரவியயன்

317 கையால் வருந்தக் கவினுறீஇச் செய்தமைத்த
மையார் தடங்கண் மடமாது—சையநதி

318 மன்னன் பொருப்பில் வளர்பாவை மீனுயர்த்த
தென்னன் பொருப்பிற் செழுந்தென்றல்—பொன்னார்ந்த

311—13 ஓடை - நெற்றிப்பட்டம், வாரணம் - யானை=கஜேந்திரன். கரம் குவித்து - கைகூப்பி=வணங்கி. கைவாரணம்-கைச்சங்கம்=கைவளை. நொய்ய - சிறிய. இடைசோர்ந்த - இடையினின்றும் நழுவிய. மணிக்கலை - மணியாணியன்ற மேகலை. பூந் துவரை - பொலிவுடைய துவாரகை.

296—313 செவ்வியுடையாள் (296), அமுதம், பஞ்சபாணம் (297), தேன், வல்லி (298), குழலாள் (299), நுதலாள் (310), விழியாள் (300), தோளினாள் (301), முலையாள் (302), வயிற்றினாள் (303), இடையாள் (304), அல்குலாள் (305), துடையினாள் (306), அடியினாள் (307), கற்பிப்பாள் (308) ஆகிய மடந்தையொருத்தி (296) அணைத்து, பாடுதலும் (309), சிறுபுலியூர்மாயன் பவனிவர (310), அம்மடந்தை ஒழிந்து, எழுந்து, ஓடி, வணங்கி, மெலிந்தாள் (311), இழந்தொழிந்தாள் (313) என முடிவுகொள்க.

317—18 கவின் - அழகு. உறீஇ - உறுவித்து. சையநதிமன்னன் பொருப்பில் வளர் பாவை - குடகமலையிற்றோன்றிய பேரியாற்றையுடையவனாகிய சேரனது கொல்லிமலையில் உள்ள பாவை=கொல்லிப்பாவை. மீனுயர்த்த - மீனைக் கொடியின்கண் மேம்படக்கொண்ட. தென்னன் - பாண்டியன். தென்னன்பொருப்பு - பொதியம்.

319 *நீரகஞ்சேர் நெற்றி நிலாத்திங்கட் டுண்டத்தாள்*
காரகங்கார் வானமன்ன கார்க்குழலாள்—பேரொளிய

320 *விற்றுவக்கோ டென்ன மிளிரும் புருவத்தாள்*
பொற்குழைசேர் கண்ண புரத்தினாள்—முற்றுநீர்க்

321 *கங்கைவளை சேர்ந்தகரைக் கண்டத்தாள் காந்தண்மல*
ரங்கைவளை சேர்ந்த வழகினாள்—துங்கமணிச்

322 *சித்திர கூடந் திருநீர் மலைபோலும்*
முத்துவடம் பூண்ட முலையினாள்—அத்தன்

319—332 அரிவையின் கேசாதிபாதவருணனையில் திருமால்திருப்பதிகளிற் பலவற்றின் பெயர்களும் தொனிக்கப் புணர்த்தநயம் உவகையூட்டுவது.

319 நீர் அகம் சேர் நெற்றி நிலாத்திங்கள் துண்டத்தாள் - நீர்மையைத் தன்னிடத்துக்கொண்ட நெற்றியாகிய நிலவையுடைய மதிப்பிளவையுடையவள். கார் அகம் கார் வானம் அன்ன கார்க்குழலாள் - குளிர்ச்சியையுட் கொண்ட நீரைப்பொழிகின்ற மேகத்தையொத்த கரிய கூந்தலையுடையாள். இதனுள் நிலாத்திங்கட்டுண்டம், காரகம், கார்வானம் என்னும் திருமால் திருப்பதிகளின் பெயர்கள் அமைந்துவிளங்குதல் காண்க. பேர் ஒளிய - மிக்க ஒளியையுடைய.

320 வில் துவம் கோடு என்ன மிளிரும் - வில் இரண்டின் வளைவையொத்துவிளங்கும். குழை - காதணி. கண்ணபுரம் - கண்ணாகிய இடம். இதனுள் திருவிற்றுவக்கோடு, திருக்கண்ணபுரம் என்ற தலங்கள் அமைந்தவாறு காண்க.

320—21 நீர் முற்று கங்கைக்கரைசேர்ந்த வளைக்கண்டத்தாள் எனக் கூட்டி, நீர்மிக்க கங்கையின்கரையிற்பொருந்திய சங்கையொத்த கழுத்துடையாள் எனப் பொருளுரைக்க. காந்தள்மலர் அம் கை வளைசேர்ந்த அழகினாள் - காந்தட்பூவையொத்த அழகியகையினிடத்து வளையணிந்த அழகினையுடையாள். இதனுள், கங்கைக்கரைக்கண்டம் என்னும் திருப்பதி தொனிக்கப் புணர்த்தநயம் காண்க.

321—22 துங்கம் - உயர்ந்த. மணி - இரத்தினங்களையுடைய. சித்திரகூடபருவதமும் திருநீர்மலையும்போன்ற முத்துமாலையணிந்த இணைத்தனங்களையுடையாள் என்றபடி. இதனுள் திருச்சித்திரகூடம், திருநீர்மலை என்னும் திருப்பதிகளின்பெயர்கள் அமைந்தமை காண்க. அத்தன் - இறைவன்.

323 திருத்தங்கா லென்னத் திகழுதரத் தாள்மா
லுருத்தங்கா ரோம வொழுங்காள்—மருத்தேர்

324 திருவல்லிக் கேணிவலஞ் செய்யுஞ் சுழிபோல்
ஒருவல்லிக் கிழுந் தியினாள்—பெருமான்

325 ... ... போலு மகன்று சிலைவேடன் மனஞ்செய் ?
கடித்தானம் வாய்த்த ... ... லைக்கி

326 யூாடகஞ்சேர் வாழையிரண் டன்ன குறங்கினாள்
பாடகஞ்சேர் செம்பொற் பதத்தினாள்—சூடகஞ்சேர்

327 செங்கைத் திரு ... ... சிறுபுலியூர்
அங்கைத் திகிரியரு மாகடலைக்—கொங்கைத்

328 தலைச்சங்க நாண்மதியந் தன்னிலெண்ண மாரன்
சிலைச்செங்கை வாளிசெருச் செய்ய—நிலைத்த

322—23 அத்தன் தங்கு ஆல் திரு தங்கு ஆல் என இயைக்க. திகழ்-விளங்குகின்ற. உதரம் - வயிறு. பிரளயவெள்ளத்தில் இறைவன் குழவியுருவாய்த்தங்கிய சிறப்புமிக்க ஆலிலைபோன்று விளங்கும் வயிற்றினையுடையாள் என்றபடி. மால் உரு தங்கு ஆ ரோம ஒழுங்காள் - பேரழகுபொருந்திய அதிசயிக்கத்தக்க உரோமவல்லியையுடையாள். இதனுள் திருத்தங்கால் என்னும் திருப்பதியின்பெயர் புலப்படப் புணர்த்தமை காண்க. மரு தேர்-வாசனையுடைய.

324 திரு அல்லிக்கேணி வலம் செய்யும் சுழிபோல் - சிறந்த அல்லிக்கொடிகள் நிறைந்த நீர்நிலையில் வலமாகச் சுழித்துத் தோன்றிய நீர்ச்சுழிபோல்கின்ற. ஒருவல்லி - ஒப்பற்ற ரோமாவளி. உந்தி - கொப்பூழ் இதனுள் திருவல்லிக்கேணி யென்னும் தலம் குறிக்கப்பட்டது.

325 இதனுள் திருக்கடித்தானம் என்னும் திருப்பதி வந்தவாறு காண்க. கடித்தானம் - அரை; நிதம்பமுமாம்.

326 ஆடகம் சேர் இரண்டுவாழை யன்ன குறங்கினாள் - பொன்னாற்செய்த திரட்சியையுடைய இரண்டுவாழைத்தண்டுபோலும் தொடையினையுடையாள், ஆடகம் - பொன், சேர்தல் - திரட்சியுடையதாதல், குறங்கு - தொடை. பாடகம் - காலணி; பதம் - கால். இதனுள் பாடகம் என்னும் திருப்பதி கூறப்பட்டது. சூடகம் - கைவளை.

327—28 திகிரி - சக்கரம். அருமாகடலைக் கொங்கைத்தலைச் சங்கம் நாண் மதியந்தன்னில் எண்ண - அருமாகடலமுது என்னும் திருநாமத்தை

329 நறையூருந் தண்கா நடுவிருந்து கண்ணீ
ருறையூர் வளையோ டொழுகப்—பிறைநுதலாள்
330 கூடல்வளைத் தன்பிற் குறிபார்க்கு மெல்லைக்கட்
சேட கிரித்திருமால் தேரழுந்தூர்—மாடநெடுஞ்

யுடைய சிறுபுலியூர்த்திருமாலைத் தன் தனதடத்தே கூடுதலை நாணொடுகூடிய மனத்தே நினைய. சங்கம் - கூட்டம். மாரன் செங்கைச் சிலைவாளி(யாற்) செருச்செய்ய என இயைக்க. மாரன் - மன்மதன். சிலை - வில். வாளி - அம்பு. செரு - போர். இதனுள் திருத் தலைச்சங்கநாண்மதியம் என்னும் திருப்பதி வந்தவாறு காண்க.

329 நறை ஊரும் தண் கா நடு இருந்து - தேன் பெருக்கெடுக்கும் குளிர்ந்த சோலையினிடையே தங்கி. நறை - தேன்; நறுமணமுமாம். இங்கே திருநறையூர், திருத்தண்கா, உறையூர் என்னும் திருப்பதிகள் தோன்ற ஆண்ட நயம் காண்க. கண்ணீர் உறை ஊர் வளையோடு ஒழுக - கண்ணீர்த் துளிகள் மிக்க கைவளைகளுடன் விழ. நுதல் - நெற்றி. பிறைநுதலாள் என்றது இங்கே அரிவையை.

330 கூடல்வளைத்தல் என்பது மகளிர் தாம் எண்ணிய கருமம் கைகூடுமோ கூடாதோ என்று அறியும்விழைவால் கண்ணைமூடிக்கொண்டு மணலிலே விரலால் வலயமாகச் சுழித்தலாம். இவ்வாறு சுழிக்குங்கால் அச்சுழி தொடங்கியஇடத்தே வந்துபொருந்தின் தாம் நினைந்தது கைகூடுமென்பதும் பொருந்தாதாயிற் கைகூடாதென்பதும் மகளிர்குழூவழக்கு. பிறைநுதலாள் (329) சிறுபுலியூர்த்திருமால் வந்து தன்னைக் கூடுவனோ கூடானோ என்று கூடலிழைத்துக் குறிபார்க்கும்பொழுதில் (330) என்க. இதனுள் கூடலென்னும் திருப்பதி தோன்றியவாறு காண்க.

319—30 குழலாள், நெற்றியாள் (319), புருவத்தாள், கண்ணினள் (320), கண்டத்தாள், கையினள் (321), முலையினள் (322), உதரத்தாள் உரோமவொழுங்கினள் (323), உந்தியினள் (324), கடித்தானத்தாள் (325), குறங்கினள், பதத்தினள் (326), மடமாது (317), பாவை, தென்றல் (318) ஆகிய அரிவையொருத்தி (316), சிறுபுலியூர் அருமாகடலை (த் தன்) கொங்கைத்தலைச் சங்கம் எண்ண(லால்) மாரன் செருச்செய்ய (327—28), பிறைநுதலாள் கண்ணீர் வளையோடொழுகக் கா நடுவிருந்து (329), கூடல்வளைத்துக் குறிபார்க்கும் எல்லைக்கண் (330) என முடிவுகொள்க.

331 செம்பொன்செய் கோவில் செறிந்ததிரு வீதியின்வாய்
உம்பர் முனிவ ருவந்தேத்த—நம்பன்
332 திருக்கா வளம்பாடிச் செந்தமிழ்நால் வேதம்
இருக்கார் மொழியா ரிசைப்ப—நெருக்கியதார்
333 ஆடன்மா மேற்கொண் டணிதிருத்தே ரூடுவரக்
கூட லொழிந்தெதிர்போய்க் கும்பிட்டாள்—ஓடரிக்கண்
334 ணீர்சோர நாண நிறைசோர வாணுதலின்
வேர்சோர மெய்புளக மீதூரக்—காரார்ந்த

330—33 சேடகிரித்திருமால் (330), நம்பன் (331), அணிதிருத்தேரூடு, நெருக்கிய தார் ஆடன்மா மேற்கொண்டு (333), உம்பர் முனிவர் உவந்தேத்த (331), இருக்கார்மொழியார் திருகா வளம் பாடிச் செந்தமிழ் நால் வேதம் இசைப்ப (332), நெடுமாடம் (330), செம்பொன் செய்கோயில் செறிந்த (331) தேர் அழுந்து ஊர் (330)த் திருவீதியின்வாய் (331) வர (333) என இயைத்துத் திருவேங்கடமலையிலெழுந்தருளியுள்ள திருமாலும் நம் இறைவனுமான (சிறுபுலியூர்) அருமாகடலமுது, அழகிய திருத்தேரிடையே, இருக்கிப்பிணித்த மாலையினையுடைய நாட்டியம்வல்ல குதிரைநம்பிரானில் வீற்றிருந்து, தேவரும் முனிவரும் மகிழ்ந்து வணங்க, வேதங்கள் நிரம்பிய மொழிகளையுடைய அந்தணர் மாறுபடாத இறைவன் செல்வங்களை வியந்து பாராட்டிச் செவ்விய தமிழ்வேதம் நான்கையும் இசையொடுபாட, உயர்ந்த மாடங்களும் செவ்விய பொன்னாற்செய்த கோயில்களும் நெருங்கிய தேர்கள் பதிந்துள்ள சிறுபுலியூர்த் திருவீதியில் எழுந்தருள எனப் பொருளுரைத்துகொள்க. இப்பகுதியிற் சேடகிரி, தேரழுந்தூர், செம்பொன்செய் கோவில், திருக்காவளம்பாடி என்னும் திருப்பதிப்பெயர்களும் தோன்றியவாறு காண்க. சேடகிரி—திருவேங்கடமலை. இம்மலை ஆதிசேடனமிசமாதலின் இப்பெயர்பெற்றது. உம்பர் - தேவர். நம்பன் - நம் இறைவன். திருகாவளம் என்பது எதுகைநோக்கித் திருக்காவளம் என்றானது விகாரம். திருகா - முரண்படாத. செந்தமிழ் நால்வேதம் என்றது ஆழ்வார்கள் அளித்த அருளிச்செயல்களை. இருக்கு—வேதம். இசைப்ப - பண்ணொடு பாட. தார் - மாலை. கூடல் ஒழிந்து - கூடற்சுழியிழைத்தலை விட்டு. கும்பிட்டாள்- வணங்கினாள். அரி ஓடு கண் - செவ்வரி கருவரி பரந்த கண்(களிலிருந்து).

334 சோர - விழ. நாணமும் நிறையும் சோர என விரிக்க. சோர - நழுவ. வாள் நுதலில் - ஒளிபொருந்திய நெற்றியின்கண் (உண்டாகிய). மெய் - உடல். புளகம் - மயிர்சிலிர்த்தல். மீதூர - மிக. கார் ஆர்ந்த-மேகத்தையொத்த. இதனுள், சிறுபுலியூர்த்திருமாலைக் கண்ட அரிவைமாட்டு நிகழ்ந்த மெய்ப்பாடுகள் கூறப்பட்டன.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்... ...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியதுநாற்பது (உரை) ...	0	3	0
4.	பலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	0	8	0
36.	உபமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0

42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	13	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0

குறிப்பு:-ஸ்டாக்கிலில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்திலிருந்து மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 45 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 15-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4-0-0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன்.

மானேஜர்.